பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 75

ஞாயிற்றுக்கிழமை
09 பெப்ரவரி 2025

தை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**உப்புக்கு தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும்** » 07

# மாற்றுக்காணிகள் என்ற பேச்சுக்கே இடமில்லை!

## காணி உரிமையாளர்கள் அறிவிப்பு
## தொடர் போராட்டத்துக்கும் திட்டம்

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 9**

**தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸவிகாரைக்குப் பதிலாக, மாற்றுக் காணிகளை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.** 15

மேலதிக மாவட்டச் செயலர்

## சிவகரனுக்கு வழங்கப்பட்ட நியமனம் அரசால் ரத்து!

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலராக, வேலணை பிரதேச செயலாளரான சிவகரன் நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த நியமனக் கடிதம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.
'இந்த நியமனம் ரத்துச் செய்யப்பட்டதில் அரசியல் தலையீடுகள் எவையும் இல்லை. அனுபவங்கள் மற்றும் பணிமூப்புத் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் 04

தலைவர் பிரபாகரனின் இளையமகன்

## பாலச்சந்திரன் படுகொலை திட்டமிட்டு நடக்கவில்லை!

### நாமல் ராஜபக்ச புதுக்கதை

கொழும்பு, பெப். 9
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்படவில்லை என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
ஊடகமொன்றுக்கு வழங்கிய 15


படம் :- ஐ. சிவசாந்தன்

## இந்துக்களின் போர்: யாழ்.இந்து வெற்றி!

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'இந்துக்களின் போர்' கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 15

**அரசாங்கத்திடம் நெல்லை விற்க விரும்பவில்லை!** » 02

## கட்டைக்காட்டில் நேற்று கொக்கெய்ன் மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்கரையில் நேற்றுக் காலை ஒரு கிலோ கொக்கெய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.
வெற்றிலைக் 15



அரசமாளிகையில் இருந்து

## மஹிந்த வெளியேறவேண்டும் மக்கள் விருப்பமும் அதுவே!



கொழும்பு, பெப். 9
அரசாங்க மாளிகையிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர். எனவே, சட்ட நடவடிக்கைக்குச் செல்வதற்கு முன்னர் 15

## 19 1/2 பவுண் திருட்டு மேலும் மூவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் 19 பவுண் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் 15



'இவயளும் வாயால வெருட்டிக் கொண்டிருக்கினமே தவிர, ஒண்டையும் செய்துகாட்டுறதா இல்ல கண்டியளோ...'

## பொருளாதார மேம்பாட்டுக்கு முழுமையான ஆதரவு!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, பெப். 9
இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
ஏற்றுமதியாளர்களுக்கான விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. 15

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 3983
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 03 20 43 54
விசேட எழுத்து K

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1050
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 09 10 46 57

**NLB ஜய**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0009
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 4 9 3 3

**மெகா பவர்**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2089
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 23 42 68 71

**மஹஜன சம்பத**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5741
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 4 6 2 1 4 7

**தன நிதானய**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1771
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 11 20 33 53
விசேட எழுத்து K

**அத சம்பத**
திகதி 08.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 316
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 2 1 4 7

**சுபிரி தன சம்பத**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0449
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கம் 6 6 0 5 3 3

**Super Ball DLB**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2715
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 28 56 62 66

**சனிதா DLB**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 10 21 41 69
வெற்றி வாரம் 4876

**SASIRI DLB**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0618
வெற்றி இலக்கம் 25 41 49

**லக்ன ராசி**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம் 17 48 53 57
சீட்டிழுப்பு வாரம் 4427

**KAPRUKA DLB**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 35
வெற்றி இலக்கம் 23 34 39 69
வெற்றி வாரம் 1891

**அத கோடிபதி DLB**
திகதி 08.02.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 03 24 29 69
வெற்றி வாரம் 2541

# அரசால் நெல் கொள்வனவு; புறக்கணிக்கும் விவசாயிகள்

**கொழும்பு, பெப்.9**

**நெல் சந்தைப்படுத்தல் சபையானது நெல்லை கொள்முதல் செய்ய ஆரம்பித்து இரண்டுநாள்கள் கடந்துள்ளபோதிலும் விவசாயிகள் சபைக்கு நெல்லை விற்பனை செய்ய முன்வரவில்லை என்று சபையின் தலைவர் ஏ. எம். யு. பின்னலந்த தெரிவித்துள்ளார்.**

நெல் கொள்முதல் செய்வதற்காக 40க்கும் மேற்பட்ட நெல் களஞ்சியசாலைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

எனினும் விவசாயிகள் பலரும் அதிக விலைகளை வழங்கும் தனியார் ஆலைகளுக்குத் தங்கள் நெல்லை விற்கத் தொடங்கியுள்ளனர். அதிக ஈரப்பதம் இருந்தபோதிலும் தனியார் வியாபாரிகள், கிலோவுக்கு ரூ. 120 பண்ணை விலையை வழங்குகின்றனர் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, அரசாங்கத்திற்கு நெல்லை வழங்கும்போது, தங்களே நெல்லை உலர்த்தி சந்தைப்படுத்தல் சபைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகவும், அதில் போக்குவரத்துச் செலவுகளும் உள்ளடக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.



அதேவேளை, நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை அதிகரிக்கக் கோரி விவசாயிகள் அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மு.கா. எம்.பி.மீது தாக்குதல்

கொழும்பு, பெப்.9

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். நளீம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று ஏறாவூர் ஆதார மருத்துவமனைக்கு முன்பாக நடந்துள்ளது. இதில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## சட்டமா அதிபர் மீது அரசியல் அழுத்தம்

*சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப். 9

சட்டமா அதிபரின் பரிந்துரைகள் மீது அரசியல் ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடாது. அவ்வாறு செய்வதன் மூலம் சட்டத்தின் சுயாதீனத்தன்மை சவாலுக்கு உட்படுத்தப்படும். இவ்வாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை வழக்கின் மூன்று சந்தேகநபர்களை விடுதலை செய்வது குறித்த சட்டமா அதிபரின் பரிந்துரையைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அரசாங்கம் கருத்துகளை வெளியிட்டுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் குறித்து உச்சநீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும். இந்த விவகாரத்தில் தலையீடு செய்வது சட்டத்தின் நியாயதிக்கத்தைப் பாதிக்கும்- என்றுள்ளது. (ச-இ)



## தூதரக நியமனம் அதிருப்தி

கொழும்பு, பெப். 9

இராஜதந்திரத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகரகங்களுக்கான அரசியல் நியமனங்கள் குறித்து இலங்கை வெளியுறவு சேவை சங்கம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நியமனங்கள் விடயத்தில் தொழில்முறை, தகுதி மற்றும் இராஜதந்திர நிபுணத்துவம் ஆகியவற்றின் நிறுவப்பட்ட விதிமுறைகள் மதிக்கப்படவில்லை என்று வெளியுறவு சேவை சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. (ச-இ)

## அரச திணைக்களங்களிடமிருந்து 14,568 .42 ஏக்கர் காணியை யாழ்.மாவட்டத்தில் விடுவிக்குக

யாழ். மாவட்டத்தில் வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் காணப்படுகின்ற 77835 .55 ஏக்கரில் 14 ஆயிரத்து 568 .42 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வனவள ஜீவராசிகள் திணைக்களத்திடம் 72 ஆயிரத்து 438.47 ஏக்கர் நிலப்பரப்பும் வனவளத் திணைக்களத்திடம் 5397.08 ஏக்கர் நிலப்பரப்பும் காணப்படுகின்றது. இந்த நிலையில் வனவளத் திணைக்களத்திடம் 14171.11 ஏக்கர் நிலப்பரப்பையும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் 5397.08 ஏக்கர் நிலப்பரப்பையும் பொதுமக்கள் மற்றும் மாவட்டத்தின் தேவைகருதி விடுவிக்கவேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-125)

## யாழ்.மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணத்தில் புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அலுவலகமொன்று திறக்கப்படவுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு பிரச்சினை தொடர்பில் நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கைக்கு அமைய கடவுச்சீட்டு வழங்கப்படும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முடிவெடுக்கப்படும்.

கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு முன்னால் இன்றளவிலும் வரிசை காணப்படுகின்றது. எனவேதான் நாளாந்தம் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை மருத்துவமனைகளில் மருந்துகள் 10 வீத விலைக்கழிவு

## வடக்கு கால்நடை சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.9**

**வடக்கு மாகாணத்திலுள்ள கால்நடை மருத்துவ அலுவலகங்களில் கால்நடைகளுக்கான மருந்துகளை உச்சபட்ச சில்லறை விலையைவிட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: 2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கால்நடை மருத்துவ அலுவலகங்களில் கால்நடைகளுக்கான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனாலும், அந்த நடைமுறை சில காரணங்களால் நிறுத்தப்பட்டு பின்னர் கால்நடைகளை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இந்த நிலையில் அண்மையில் வடக்கு மாகாண ஆளுநரை அரச கால்நடை மருத்துவர்கள் சந்தித்து பண்ணையாளர்கள் மருந்துகளைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டினர்.

இந்தநிலையில் கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைக்கு அமைய ஆளுநரின் அனுமதியுடன் விசேட நிதி ஒதுக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட அவசியமான மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்பட்டு கால்நடை மருத்துவ அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதனூடாகப் பண்ணையாளர்களின் மருந்துத் தேவைகளை அலுவலகங்களிலேயே நிவர்த்தி செய்யவும் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விலைப்பட்டியல் கால்நடை மருத்துவ அதிகாரிகள் பணிமனையில் காட்சிப்படுத்தபட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ச-41-27-66)

# தைப்பூச வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 9

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூச வழிபாடுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. காலை 9 மணிக்கு சிறப்பு அபிஷேகம், பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருவார்.

★★★

யாழ்ப்பாணம், பெப். 9

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத்தை முன்னிட்டு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலையில் சிறப்பு அபிஷேக பூஜைகள் இடம்பெற்று தொடர்ந்து மாலை 6 மணிக்கு சுவாமி மஞ்சத்தில் எழுந்தருளி வீதி உலா வருவார்.

★★★

யாழ்ப்பாணம், பெப்.9

வண்ணை சாந்தயர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் தைப்பூச தினத்தன்று ஏடு தொடக்கல் நிகழ்வு காலை வேளையில் இடம்பெறும். மாலை 5 மணிக்கு சிறப்புப் பூஜை மற்றும் அபிஷேகங்களும் இடம்பெறவுள்ளன.

★★★

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி ஆலயத்தில் தைபூச தினத்தன்று சிறப்புப் பூஜை வழிபாடுகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ச-25,17)



## 'ஸ்மார்ட் யூத்' செயற்றிட்டம்

மன்னார், பெப். 9

மன்னார் மாவட்டச் செயலகத்தின் மனித வலு வேலைவாய்ப்புப் பிரிவின் ஏற்பாட்டில் , பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான "ஸ்மார்ட் யூத் நிகழ்ச்சித் திட்டம்" நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார், நடுக்குடாவில் அமைந்துள்ள 'கூல் மேன்' மீன் ரின் உற்பத்தித் தொழிற்சாலைக்கு களவிஜயமும் மேற்கொள்ளப்பட்டது. (ச-25, 213)

## ஒலிபெருக்கிப் பாவனை; கட்டுப்படுத்த நடவடிக்கை

### யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 9

பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலான ஒலிபெருக்கிப் பாவனைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார். ஆலயங்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து மிகவும் தொலைவில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு அதிக ஒலி எழுப்பப்படுகிறது.

ஆலயங்களில் எழுப்பப்படும் ஒலிபெருக்கிச் சத்தங்கள் ஏனையோருக்கு இடையூறு ஏற்படாவண்ணம் ஆலய நிர்வாகத்தினர் பேணவேண்டும். ஒலிபெருக்கிப் பாவனையால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கின் பிரதேச செயலகங்களுக்குத் தெரிவிப்பதன்மூலம் பிரதேச செயலர்கள் அதனை உடனடியாகப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசென்று ஒலியின் அளவைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,66,27,125)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், பெப். 9

கொழும்புத்துறை மேற்கு வதரியிட விநாயகர் ஆலயம் மற்றும் பழனி ஆண்டவர் ஆலயம் ஆகிவற்றில், மணவாளக்கோலத் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலையில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளைத்தொடர்ந்து 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார் என ஆலய நிர்வாகசபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25. 17)

★★★★★★★★★★

யாழ்ப்பாணம், பெப். 9

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் மணவாளக்கோல திருவிழாவை முன்னிட்டு, நாளை திங்கட்கிழமை காலை 108 சங்காபிஷேத்துடன் சிறப்புப்பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து நண்பகல் மகேசுவரர் பூஜையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

# 'கிளீன் சிறீலங்கா' திட்டம்; சினமுற்ற ஓட்டோச்சாரதி

வவுனியா, பெப். 9

'தூய இலங்கை' திட்டத்தின் கீழ் முச்சக்கரவண்டி சாரதிக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டதால், அதிருப்தியடைந்த முச்சக்கரவண்டி சாரதி தனது வாகனத்தின் மேலதிக பாகங்களையும் கழற்றியெறிந்து வீசியுள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'தூய இலங்கை' திட்டத்தின் ஓர் அங்கமாக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பாகங்களை அப்புறப்படுத்துமாறு பொலிஸாரால் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றை வழிமறித்த பொலிஸார் அதில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக உதிரிபாகங்களை அகற்றுமாறு தெரிவித்திருந்துடன், தண்ட குற்றப் பத்திரத்தையும் வழங்கியுள்ளனர். இதனால் அதிருப்தி அடைந்த ஓட்டோச் சாரதி பொலிஸாரின் முன்னிலையிலேயே குறித்த உதிரிபாகங்களை காலால் அடித்து உடைத்ததுடன், ஏனைய பாகங்களையும் கழற்றி வீசியுள்ளார்.

சாரதியின் இந்தச் செயற்பாட்டை அவதானித்த [illegible] (ச-22,110)

## வருடாந்த கலைவிழா

யாழ்ப்பாணம், பெப்.9

அறிவாலயம் ஆளுமை விருத்தியகத்தின் வருடாந்த கலைவிழா தலைவர் திருமதி சிவநயனி சர்வேஸ்வரா தலைமையில் சட்டநாதர் வீதி நல்லூரிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளருமான ஆறு.சிறிஸ்கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் கே.குமாரசாமி, கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபகர் என்.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தன் பெருமஞ்சம் முன்னாயத்தக் கலந்துரையாடல்

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப் பெருமஞ்சம் இடம்பெறவுள்ளது. அதனையொட்டி முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தைப்பூச தினத்தினை முன்னிட்டு ஆலயச்சூழலில் முன்னெடுக்கவேண்டிய நடைமுறைகளான பிரதேச சபையினரால் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளைக் கையாளுதல், தற்காலிகக் கடைகளுக்கான நடைமுறைகள், இடஒதுக்கீடுகள் உள்ளிட்டவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் தைப்பூச தினத்தன்று காலை 5.30 மணிக்கு அபிஷேகங்கள் இடம்பெற்று விசேட பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து காலை மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து பாற்குடப் பவனி ஆரம்பமாகும். அதற்கான பற்றுச்சீட்டுகளை இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் பக்தர்கள் பெற்றுக்கொள்ளமுடியும். பாற்குடப் பவனியைத் தொடர்ந்து காவடி எடுத்தல் நிகழ்வு இடம்பெறும். அன்றைய நாள் ஆலயத்துக்குச் சொந்தமான சங்குவேலியில் உள்ள வயலில் நெல் அறுவடைசெய்து, அதனை எருது வண்டியில் ஆலயத்திற்குப் பாரம்பரிய முறைப்படி எடுத்துவந்து, ஆலயமுன்றலில் பொங்கல் நிகழ்வு இடம்பெறும். அத்துடன் ஆலய மணிமண்டபத்தில் கலைநிகழ்வுகள் இடம்பெறும். தொடர்ந்து மாலை விசேட பூஜைவழிபாடுகள் இடம்பெற்று, மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று, ஆறுமுகசுவாமி, வள்ளி தெய்வானை சமேதராய், உலகப் பெருமஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-33-20, 26)

# வீதித்தடை; மாற்றுவீதியை பயன்படுத்துக

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தெற்குப் பக்கமாக வுள்ள கோயில் வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் கைலாசபிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள நல்லூர் தெற்கு வாயில் அலங்கார வளைவு எதிர்வரும் 11 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

அதற்கமைய அதன் வேலைகளைப் பூரணப்படுத்து வதற்கு ஏதுவாக இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை 3 தினங்கள் கைலாசப்பிள்ளையார் கோவிலிலிருந்து நல்லூர் செட்டித்தெருகுறுக்கு ஒழுங்கை வரைக்குமான பகுதியில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் குறித்த வீதியைப் பயன்படுத்துவோர் மாற்று வீதியை பயன்படுத்துமாறு யாழ். மாநகர ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-25)

## கொள்வனவு செய்யப்படும்
நெல், தானியங்கள், மில் உபகரணங்கள் - கொள்வனவு செய்யப்படும்.
மாப்பியன் மில் 077 772 2215

## மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்
ஒரு சதுர அடி - 65 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 90 ரூபாய்.
077 334 1281
(CS/29608) J-1

## வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
077 391 2298, 076 009 8661
0097 152 777 8300 (Whatsapp)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு
மல்லாகம் KKS Road இல் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு
2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 076 744 8099
(CR/44289) J-1

## சிவலிங்கம் சேர்
## மணிவிழா வாழ்த்து



இமயம் போன்ற பரந்த நெற்றி
துளசிச் செடி போன்ற மெலிந்த தோற்றம்
நரைத்த முடி, சிறிய மீசை
அன்பும் ஆக்ரோஷமும் கலந்த கண்கள்
அந்தக் காலை நேர சூரியனைப் போன்றே
பொறுமையாய் ஒளி வீசும் முகம்
இடை இடையே
கல கல வென்ற கள்ளம் கபடம் அற்ற சிரிப்பு
கம்பீரக் குரல்

காற்றில் ஆடும் வெண்பலகையில்
நெல்மணி போன்ற அவர் எழுத்துக்கள்
அறுவடை செய்து எடுத்து வருவோம்
எம் புத்தகப் பையினில்

அணுவில் இலத்திரன் ஆடும் நர்த்தனமே
அண்டத்தை ஆக்கிடும் சூட்சுமம்
ஆதிசிவன் படைத்த உலகின்
அரிய ரகசியங்களை எடுத்துரைக்க
அந்த சிவலிங்கத்தாரே வந்தது
எம் புண்ணியம்

நிலவில் பாட்டி வடை சுட்ட கதையை
புத்தகத்தில் படிப்பதற்கும்
அம்மா சொல்லக் கேட்பதற்கும்
இடையிலான வித்தியாசம் என்னவோ
அதுவே
மனிதன் நிலவில் கால்பதித்த ரகசியத்தை
நூல்களில் பெற்றதற்கும்
சேரிடம் கற்றதற்கும்
இடையிலான வித்தியாசம்

அவரின் இயற்பியல்
ஆளுமையை மிஞ்சுவது
அவர் மாணவர்கள்
மேல் காட்டும் அக்கறை
வயதுக்கோளாறில்
படிப்பில் அக்கறை அற்று
தடம் மாறும் போதெல்லாம்
அழைத்து அறிவுரைகள் செய்து
அம்மா அப்பாவிடமும் எடுத்துக்கூறி
வாங்கை நிரப்ப மட்டும்
மாணவர்களை பயன்படுத்தும்
பல ஆசிரியர்கள் மத்தியில்
வாய்மையையும் நேர்மையையும்
சேர்த்துக் கற்பித்து
அதன்படி வாழ்ந்தும் காட்டுபவர்
எம் ஆசான்

இன்னும் பல தசாப்தங்கள்
ஆரோக்கியமாய் வாழ்ந்து
இன்னும் ஆயிரம் ஆயிரம்
மாணவர்களுக்கு
இளைப்பாறும் விருட்சமாய்
வழி காட்டும்
துருவ நட்சத்திரமாய்த்
தாங்கள் திகழ
எல்லாம் வல்ல ஈசனை வேண்டி
இந்த மணிவிழாத் தருணத்தில்
மனமுருகித் தங்களை
வணங்கி வாழ்த்துகின்றோம்
எம் அன்புள்ள ஆசானே !!

-பழைய மாணவர்கள் (2012 AL)

## சிவகரனுக்கு...

சுட்டிக்காட்டியுள்ள நிலையில், அனைத்து விடயங்களும் பரிசீலனை செய்யப்பட்டு இந்த நியமனம் பொருத்தமான நபருக்கு வழங்கப்படும்' என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலராக மருதலிங்கம் பிரதீபன் செயற்பட்டு வருகின்றார். இதனால், மேலதிக மாவட்டச் செயலருக்கான பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. அந்த வெற்றிடத்துக்கான நியமனம் வேலணைப் பிரதேச செயலாளரான சிவகரனுக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையில், ஒன்பது பிரதேச செயலாளர்கள் இணைந்து, அனுபவம் மற்றும் பணிமூப்பு உள்ளிட்ட விடயங்கள் இந்த நியமனத்தில் கருத்திற்கொள்ளப்படவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கடிதம் அனுப்பிவைத்தனர். இதையடுத்து, சிவகரன் தனது பதவியைப் பொறுப்பேற்க முன்வராது விட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, இந்த நியமனத்தில் அரசியற் தலையீடு இல்லை என்றும் விரைவில் வெற்றிடம் நிரப்பப்படும் என்றும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஆரம்பகால திருமண சேவை
கனடா, அவுஸ்ரேலியா, இலண்டன் மற்றும் உள்ளூர், வெளியூர் மணமகள், மணமகன் ஆகியோர் உள்ளனர்.
1995.08.21 - விஸ்வகுலம்
1989.05.06 - விஸ்வகுலம் - இலண்டன் சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை
விவாகரத்தான இருபாலரும் உண்டு.
தொடர்பு: 077 528 9851

## வாகனம் விற்பனைக்கு
Toyoto town Ace
நல்லநிலையில் உள்ள வான் (2007) விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
075 810 3798

## சூரிய யோகாக் பயிற்சிகள் கல்லூரி
INSTITUTE OF SOORIYA YOGA
### "யோகா" பயிற்சிகள் ஆரம்பம்
பலரது வேண்டுகோளுக்கிணங்க வேத பாராயண சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் சூரிய யோகாக் கல்லூரியால் நடாத்தப்படுகின்ற யோகாப் பயிற்சிகள் ஆரம்பிக்கின்றது. 11.02.2025 செவ்வாக்கிழமை மாலை 5.30 மணிக்கு காங்கேசன் துறை வீதி, கோண்டாவில் (உப்புமடப் பிள்ளையார் கோயில் அருகாமை) வேத பாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் அறிமுகவுரையுடன் கூடிய முதல் நாள் பயிற்சி ஆரம்பமாகின்றது. மறுநாள் அரசாங்க விடுமுறை என்பதால் மாணவர்கள் மற்றும் அரச வேலையில் இருப்பவர்கள் பயன்பெறும் வகையில் 12.02.2025 புதன்கிழமை காலை 8.00 மணிக்கும் அறிமுக வகுப்பு நடைபெறும். சிறந்த ஆசிரியரால் நிகழ்த்தப்படும் இப்பயிற்சிகளில் அனைவரும் இணைந்து பயன்பெறலாம்.
மேலதிக தகவல்களுக்கு: 074 231 0746

WE ARE HIRING
Strengthen your career prospects with CBC Finance Limited
Great Place To Work Certified MAY 2024-MAY 2025 LKA
BRANCH MANAGER
Jaffna

Applicant's Profile
- Minimum 05 years' experience in the banking or finance sector with a proven track record.
- Degree and/ or Professional qualifications (Full /Part) in Marketing, Banking & Finance, Credit Management or Business Administration.
- Should be a Team player with good customer relationship and negotiation skills.
- Below 40 Years of age.

Job Profile/ Main Responsibilities
- Initiate and drive the business plan to meet set strategic objectives of the branch.
- Sustain branch profitability and growth by achieving individual and branch team targets on Fixed Deposits, Leasing and Loans.
- Identify potential customers and enhance the quality of client portfolios by maintaining a superior customer service.
- Manage healthy portfolio by maintaining agreed NPL ratios and provision.
- Handling all the operational and administrative activities of the branch and complying with the regulatory frame work.



The chosen candidate will be offered an attractive remuneration package, including fringe benefits on par with benchmarked financial institutions.
Candidates will be provided with an on-the-job training.

Applicant's deatils should be submitted within 14 days of this advertisement being publicized. The designation applied for should be marked on the top left corner of the envelop or in the subject line of the e-mail.

Human Resources Department
CBC Finance Limited
No.187, Katugastota Road, Kandy.
Tel: 081-220-0272, Fax: 081-221-3966
E-Mail: careers@cbcfinance.lk
Web: www.cbcfinance.lk
CBC FINANCE
A Fully Owned Subsidiary of Commercial Bank of Ceylon PLC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை பிரதிநிதிகள்



நாம் முன்னணி உருக்கு கம்பி தயாரிக்கும் நிறுவனமாகும். உள்நாட்டு சந்தைப்படுத்தும் நோக்குடன் மேற்குறிப்பிட்ட வெற்றிடத்தை நிரப்ப ஆற்றல்மிக்க விற்பனை பிரதிநிதிகள் தேவை

**எமது தயாரிப்பு**

கட்டட நிர்மாணத்திற்காக அதிக வலிமை கொண்ட TMT உருக்கு கம்பிகள்

**கொடுப்பனவுகள்**

சம்பளத்துடன் விற்பனை கமிஷன்

**நாம் எதிர்பார்ப்பது**

- எங்கள் தரமான தயாரிப்புகளின் விற்பனையை அதிகரித்தல்
- முன்னணி நிறுவனங்களில் இத்துறையில் 03 வருட அனுபவம்.
- வயதெல்லை: 35 வயதிற்குட்பட்டவர்கள்
- இலக்கு ஊக்கம், தகவல் தொடர்பு திறன் மற்றும் வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவு.
- உறவினர் அல்லாத இருவரின் சிபாரிசு.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதி பத்திரம்
- தயாரிப்புகளை விற்பனை செய்யும் இடம்: வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம், இலங்கை.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

Administration Manager
**Ashok Steel Industries (Pvt) Ltd.,**
8th Floor, IBM Building, Nawam Mawatha, Colombo 02.
Tel: 0117 388 940-3 | Fax: 0117 314 970
Email: ashoksteel_ipl@yahoo.com | ashoksteel_ipl@sltnet.lk

## வேலைவாய்ப்பு

**தென்னம் தோட்ட முகாமையாளர் -**
**"வழக்கறிஞர் கமம்" இரணைப்பாலை புதுக்குடியிருப்பு**

- **இடம்: இரணைப்பாலை புதுக்குடியிருப்பு**
- **தோட்டத்தின் அளவு: 25 ஏக்கர்**
- **தோட்டத்தின் வயது: 50 ஆண்டுகள்**

**பதவி வெற்றிடம்: தென்னம் தோட்ட முகாமையாளர்**

**தோட்டத்தின் விவரம்:**
50 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க 25 ஏக்கர் தென்னம் தோட்டம். உயர்தர தேங்காய் உற்பத்தி மற்றும் நிலைபேறான விவசாய நடைமுறைகளுக்குப் பிரபலமானது. உள்நாட்டுப் போரால் தோட்டத்தின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டன. ஆனால் உரிமையாளர்கள் சமீபத்தில் அதன் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கியுள்ளனர்.

**பணிக்கான பொறுப்புகள்:**
தோட்டத்தின் மொத்த மேம்பாட்டிற்கான மூலோபாய உத்திகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல். தென்னை மரங்களை பராமரித்தல். புதிய மரங்களை நடுதல். பழைய மரங்கள் மற்றும் புதர்களை அகற்றுதல். பராமரிக்கப்படாத காடுகளை சுத்தம் செய்தல். முள்ளுக்கம்பி வேலியை பராமரித்தல். சொத்தின் பாதுகாப்பை உறுதிசெய்தல். நிலத்தடி கிணற்றை பயன்படுத்தி புதிய நீர்ப்பாசன வலைப்பின்னலை உருவாக்குதல் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளை மேற்பார்வை செய்தல். பூச்சி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற் படுத்துதல். மண்ணின் ஆரோக்கியம் மற்றும் வளத்தை கண்காணித்து மேம்படுத்துதல். விளைச்சல் செயல்முறையை மேற்பார்வை செய்தல். உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை பராமரித்தல். வரவு செலவு திட்டத்தை தயாரித்தல் மற்றும் வரவு செலவுகளை மேலாண்மை செய்தல். தென்னம் கன்றுகளுக் கிடையில் நடக்கக்கூடிய மரக்கன்றுகள் / பயிர்கள் தொடர்பான மூலோபாய திட்டம் மற்றும் பருவகால பயிர்களுக்கான மூலோபாய திட்டங்களை உருவாக்குதல். உள்ளூர் சமூகத்திலிருந்து பணியாளர் களைக் கண்டறிந்து மேலாண்மை செய்தல் மற்றும் உரிமையாளர் கள் மற்றும் அவர்களின் நிறுவன முகாமையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**
தோட்ட மேலாண்மையில், குறிப்பாக தென்னம் விவசாயத்தில், சிறந்த அனுபவம் மற்றும் "ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த விவசாய நடைமுறைகள்" பற்றிய வலுவான அறிவு. சிறந்த நிறுவன முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ பண்புகள் . சுயமாக வேலை செய்யும் திறன் மற்றும் "இருக்கும் விபரங்களை பகுப்பாய்ந்து" முடிவுகளை எடுக்கும் திறன். நல்ல தொடர்பாடல் திறன்கள் ஆகியவை அவசியம். விவசாயத்தில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் தகுதியுடைய மற்றவர்களும் விண்ணப்பிக்க ஊக்கு விக்கப்படுகிறார்கள்..

**தங்குவதற்கான இருப்பிட வசதி:**
தோட்ட முகாமையாளர் தோட்டத்தில் வசிப்பதற்கான இட வசதி வழங் கப்படும்.

**ஊதியம்:**
மாதாந்த ஊதியம் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் சுயவிவரத்தை info@neillydavies.lk மற்றும் m.s.seyon@neillydavies.lk க்கு அனுப்பவும். விசாரணைகளுக்கு, **சேயோன் சிதம்பரநாதன், திட்ட முகாமையாளர், வழக்கறிஞர் கமம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. தொலைபேசி:** 021 221 4401 அல்லது கைத்தொலைபேசி: 077 640 8692 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். கலட்டி சீனியர் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு சமையல் மற்றும் வீட்டுப்பணிகள் செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

Whats app:- 077 200 2424

(CS/57458) J-1

## வீடு வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் அமைதியான சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. (03 அறைகள். Kitchen, 2 Bathrooms). சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

075 600 1872

(CS/2460B) J-1

## ஆசிரியர் தேவை

புங்குடுதீவில் பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை.

- கணினி
- ஆங்கிலம்

மேலதிக விபரங்களுக்கு

077 408 9016, 071 406 6938

(CS/57454) J-1

### படுகொலை

பங்களாதேஷில் இந்துக் கோவில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவரை 23 இந்துக்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விற்பனைக்கு

தனங்களப்பு மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் 60 பரப்பு காய்க்கும் தென்னைகள் நிறைந்த தென்னந்தோட்டம் விற்பனைக்கு.

தொடர்பு:- 0094 77 425 3573

(CR/44288) J-1

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவித்த சிசில் குளிர்சாதனப்பெட்டி, முதிரை கண்ணாடி சோக்கேஸ், நெல் அளக்கும் பறை என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 075 600 1872

(CS2460A) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் பலசரக்கு கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 075 755 1922

(CS/57453) J-1

## அறை வாடகைக்கு உண்டு

யாழ். கலட்டி சீனியர் வீதிக்கு அருகாமையில் பெண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

Whatsapp:- 077 200 2424

(CS/57461) J-1

## A/L பரீட்சையின் பின்,

## என் தொழிற்சார் இலக்கை நோக்கி

## மிக அருகில்

**aat SRI LANKA**




**A/L பரீட்சைக்கு முகங்கொடுத்த நீங்கள் AAT உடன் உங்களை பதிவு செய்ய வேண்டியது ஏன்?**

- மிகவும் குறைந்த கட்டணங்களுடன் மிக உயர்ந்த வரவேற்புடைய இந்த பாடநெறியானது ஒரு வருட காலத்திற்குள் பூர்த்தி செய்யக்கூடியவாறான தொழிற்சார் தகைமையுடையதால்,
- பாட நெறியை தொடரும் போதே AAT தொழில் வங்கி மூலம் குறைந்த வயதிலேயே தொழிற்துறைக்குள் பிரவேசிக்க முடியுமென்பதால்,
- AAT இன் பூரண தகைமை பெற்ற பின், CA / CIMA / CMA/ ACCA போன்ற தொழிற்சார் பாடநெறிகள், பட்டப்படிப்புகளில் சில விலக்குகளை பெறும் வாய்ப்புள்ளதால்,
- ஒரு வருடத்திற்கான தொழில் பயிற்சியை பெற்ற பின் AAT அங்கத்தவராக முடியுமாதலால்,

→ இலங்கை முழுவதிலுமான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் நேரடியாகவோ . இணைய வழியாகவோ பதிவு செய்து கொள்ள முடியும்.
→ மிகக்குறைந்த மாணவ அனுமதி கட்டணங்கள்.
→ தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி வழி கல்வியை தொடரும் வாய்ப்பு

* நிபந்தனைகள் பொருந்தும்.

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**
0777 559 669 | 0112 559 669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே பரஸ்பரம் கருத்தொற்றுமை ஏற்படும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு குடும்பம் தொடர்பாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**கடகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு குறையும். சிலருக்கு எதிர்பாராத பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. முயற்சியில் தடை ஏற்படும்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்களுடைய யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் நீங்கள் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கன்னி:** குடும்பத்தில் உறவினர்கள் வருகை சில பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு மாலையில் லேசான அளவில் தலைவலி வரக்கூடும் என்ப தால், ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம்.

**துலாம்:** சிலருக்கு வெளியூர்க் கோயில்களை தரிசிக்கவும் வாய்ப்பு ஏற்படக்கூடும். இன்று எதிலும் நீங்கள் நிதானமாக இருப்பது அவசியம். உறவினர்களால் மனவருத்தம் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களிடம் பேசும்போது பொறுமையை கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். நீண்ட நாள்களாகப் பார்க்காமல் இருந்த தாயைப் பார்க்கவும், அவருடைய தேவையை நிறைவேற்ற வும் வாய்ப்பு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். சிலருக்கு தாய்மாமன் வகையில் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**தனுசு:** அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் கிடைத்துவிடும். புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்குச் சிறந்த நாள்.

**மகரம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். சிலருக்கு புதிய ஆடைகளை வாங்கும் வாய்ப்பு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடி வரும்.

**மீனம்:** திடீர் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும் சமாளித்துவிடுவீர்கள்.. தாய்வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள். நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவி செய்வார்கள். சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.



## ஆபத்தாக மின்கம்பம் நடவடிக்கையில்லை!

### மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் நீண்டகாலமாகக் மின்கம்பம் ஒன்று முறிந்து விழும் அபாயத்தில் காணப்படுகின்றது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக கிராம உத்தியோகத்தருக்கு தகவல் வழங்கப்பட்டு கிராம உத்தியோகத்தர் மின்சாரசபைக்கு அறிவித்ததனூடாக மின்சார சபையினர் வந்து புகைப்படம் எடுத்துச் சென்றனர். எனினும் இரு வாரங்கள் கடந்தும் இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. மின்கம்பமானது முறிந்துவிழுந்தால் உயிர்ச்சேதங்களும் சொத்திழப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளன. எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கிராமமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-25, 27)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 9

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை மைதானத்தில், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.அகிலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக பொதுமுகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.சுவீதன், சிறப்பு விருந்தினராக வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் மேஜர்.ந. கஜேந்திரன், கௌரவ விருந்தினராக பளை மத்திய கல்லூரி உடற்கல்வி அசிரியர் ஆ.கமலக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

## கிணற்றில் தவறிவீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த நபர் ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குருநகர் கொய்யாத்தோட்டம் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. அதேஇடத்தைச்சேர்ந்த இ. மோகனரூபன் (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-25, 17)

## மங்கையர்க்கரசி நினைவு இல்லம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், பெப். 9

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினின் ஏற்பாட்டில், தலைவர் அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லம் மற்றும் உருவச் சிலை திறப்புவிழா மூளாயில் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## கம்பன்விழா

சாவகச்சேரி, பெப். 9

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் கம்பன்விழா, சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'இன்றைய அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டவல்ல பெருந்தலைவன்' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும். பட்டிமன்றத்துக்கு நடுவராக கம்பவாரிதி இ. ஜெயராஜ் பங்கேற்கவுள்ளார். (ச-25,9)




## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். மாவட்டக் கால்பந்தாட்ட வீரர்களைத் தொழில் முனை வீரர்களாக மாற்றியமைக்கும் நோக்கில், யாழ். மாவட்டத்தில் இரண்டு நாள்கள் பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது. இத்தாலி நாட்டின் "ஏசி மிலான்" கால்பந்தாட்டத் தொழில்முனை கழகத்தின் பயிற்றுவிப்பாளர் டேவிட் பற்றிஸ்ரினியின் தலைமையில் குறித்த பயிற்சிநெறி முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பயிற்சியில் இலங்கைக் கால்பந்தாட்ட அணியின் முன்னாள் உறுப்பினர் அந்தோனிப்பிள்ளையும் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,125)

## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 09

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கயானா கெங்காதரன் தலைமையில் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-22, 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வாக்குகளுக்காக போராடுதல்

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும், இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடியாகத் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களே இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் நித்தமும் அத்துமீறும் தமிழக இழுவைப் படகுகள் பெருந்தொகை மீன்களை அள்ளிச் செல்கின்றன. இழுவைப் படகுகள் சிறிய மீன்களையும் அள்ளிச் செல்வதால் வடக்குக் கடற்பரப்பில் மீன்வளம் அழியும் அபாயம் ஒருபுறமும், இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் சேதமடைவது மறுபுறமும் என வடக்கு மீனவர்கள் மீண்டெழ முடியாத வாழ்வாதாரப் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தமிழக மீனவர்கள் தொடர்வதால், இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. தமிழக மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியக் கடலோரக் காவல்படையோ, தமிழக அரசாங்கமோ எந்த நடவடிக்கையும் எடுக்காதிருப்பதும் இருநாட்டு மீனவர் பிரச்சினை நீடிப்பதற்கு ஒரு முக்கியமான காரணமாக இருக்கின்றது. இந்த பிரச்சினையின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளாமல் - அல்லது புரிந்துகொள்ள விரும்பாது தமிழக அரசியல் கட்சிகளும், ஆளும்தரப்பும் வாக்கு அரசியலையே முன்னெடுத்து வருகின்றன. அதன் ஒரு அங்கமாகவே தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டத்தையும் நோக்க முடியும்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய வேண்டிய பொறுப்பும், கடமையும் இலங்கைக் கடற்படைக்கு இருக்கும் நிலையில், தமிழக மீனவர்கள் அத்துமீறும்போது கைது செய்யப்படுவது தவிர்க்க முடியாதது. அத்துமீறும் மீனவர்கள் கைது செய்யப்படுவதை ஒரு குற்றமாக நோக்கவும் முடியாது. அத்துமீறும் மீனவர்களைச் சட்ட நடவடிக்கைக்களுக்கு உட்படுத்தாது விடுவிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் தமிழகத்தின் ஆளும் கட்சி, இந்தப் பிரச்சினையின் மூல காரணத்தைக் கண்டறிந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயலவேண்டும். நாடாளுமன்ற வளாகத்தில் நடத்திய போராட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ள ஆளும் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார். ஆனால் தமிழக இழுவைப் படகுகளால் பாதிப்புகளை எதிர்கொண்டு வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் இலங்கையின் வடக்கு மீனவர்கள் தொடர்பில் யோசிப்பதற்கு அவர் மறந்துவிட்டார்.

தமிழக மீனவர்கள் எல்லைதாண்டுவதை நிறுத்தினால், மீனவர்களைக் கைதுசெய்வதற்கான தேவை எழாது. மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துபவர்கள் தமிழக மீனவர்கள் எல்லைதாண்டுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதுவே இந்தப் பிரச்சினை தீர்வதற்கான ஒரே வழி. அதை விடுத்து அரசியல் நோக்கங்களுக்காக இந்தப் பிரச்சினையை அணையாது காக்க முயன்றால் தமிழக மீனவர்களின் கைதுகளும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கப் போகின்றது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.

– முகம்மது நபி –



# பொலிஸ் உயரதிகாரிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 9

**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய 12 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், 154 பொலிஸ் நிலையக் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

அதன்படி பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர மற்றும் கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித்ரோகன ஆகியோர் உட்பட 12 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 154 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் நடைமுறைடுத்தப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மாதஇறுதியில் வருகின்றது இறக்குமதி வாகனங்கள்

கொழும்பு, பெப். 9

இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனங்களைத் தாங்கிய கப்பல் ஒன்று இலங்கையை இம்மாத இறுதியில் வந்தடையும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் சகல வாகனங்களும் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் என அந்தச் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார். (ச-இ)

# மன்னார் துறைமுக முனையம் நிர்மாணம்

மன்னார், பெப். 9

மன்னார் துறைமுகத்தின் முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். மன்னார் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# உப்புத் தட்டுப்பாடு அதிகரிக்கும்!

யாழ்ப்பாணம், பெப்.9

நாட்டில் உப்புத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக்கூடும் என உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவால் உரிமங்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக உப்பு இறக்குமதி மேலும் தாமதமடைவதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உப்பு இறக்குமதி செய்வதற்கான கால அவகாசம் இந்த மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

இ.போ.ச.வில்

# ஊழியர்கள் பற்றாக்குறை ஓய்வுபெற்றோர் இணைப்பு

கொழும்பு, பெப். 9

65 வயதுக்குட்பட்ட ஓய்வுபெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்களை மீண்டும் சேவையில் இணைக்க இலங்கைப் போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

ஊழியர்கள் பற்றாக்குறையைத் தீர்க்கும் விதமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இதற்காகப் பொதுச்சேவை ஆணையத்திடம் அனுமதிகோரியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை 10.02.2025
திங்கட்கிழமை - தை - 28
சுபநேரம் : 12.3 - 02.04
ராகுகாலம் : 08.04 - 09.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமரசம் செய்யச் சென்ற சிப்பாய் மீது தாக்குதல்

## 9 பேருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சியில் சிப்பாய் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 9 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரப்பகுதியில், இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட பொழுதுபோக்கு மையத்தில் கடந்த வியாழக்கிழமை இரு குழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது சிப்பாய் ஒருவர் மோதலில் ஈடுபட்டவர்களைச் சமரசம் செய்ய முற்பட்ட நிலையில் அவர் மீது சரமாரித்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த சிப்பாய் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 9 சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-25, 113)




# 'கிரிஷ்' கட்டடத்தில் தீ விசாரணை ஆரம்பம்

கொழும்பு, பெப்.9

கொழும்பு - கோட்டையில் உள்ள 60 மாடி கிரிஷ் கட்டடத்தின் மேற்தளத்தில் ஏற்பட்ட தீப்பரவல் குறித்து தீயணைப்புத் திணைக்களம் தற்போது முதற்கட்ட விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. கட்டடத்தின் இரும்புப் பாகங்களை எரிவாயுக் கட்டர் மூலம் பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதே தீ விபத்துக்கான பிரதான காரணம் என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# யாழ்.மாவட்டத்துக்கு 20,350 வீடுகள் தேவை

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்டத்தில் 20 ஆயிரத்து 350 வீடுகளை பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய தேவை காணப்படுகிறது என யாழ். மாவட்டச்செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்தலைமைத்துவக்குடும்பம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பம், இந்தியாவிலிருந்து மீளக்குடியேறியவர்கள், மீள்குடியேறியோர் உள்ளிட்டோர் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)



# சுஜீவ சேனசிங்கவின் நல்லெண்ணம்

கொழும்பு, பெப்.9

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தனக்குக் கிடைத்த நட்டஈடுத்தொகை முழுவதையும் பொதுச்சேவைக்கு வழங்கவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவுக்கு மத்திய வங்கி பிணைமுறி ஊழலுடன் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என சுஜீவ சேனசிங்க தெரிவித்து 250 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி மானநட்ட வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சுஜீவ சேனசிங்க கோரிய நட்டஈட்டுத் தொகையை வழங்குமாறு தீர்ப்பளித்திருந்தது.

இந்தநிலையில் தனக்குக் கிடைத்த நட்டஈட்டுத் தொகையில் 150 மில்லியன் ரூபாவை புற்றுநோய் மருத்துவமனைக்கும் 100 மில்லியன் ரூபாவை … பேராதனை மருத்துவமனைக்கும் … வழங்கப்போகிறேன் என்றும் ஒரு … மனும் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# 'நிகரி' விருதுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 9

மகளிர் விவகார அமைச்சால் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பல்துறை பெண் சாதனையாளரைக் கௌரவிக்கும் முகமாக 'நிகரி' விருதுக்கு வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா.இல.4, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது npminwa@gmail.com எனும் அமைச்சின் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி இல 02212220882, 021222 0883 … ஊடாகவோ தொடர்புகொண்… போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விவரங்களுக்கு https://np.gov.lk எனும் வடக்கு மாகாணசபையின் இணையத்தளத்தைப் பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நன்னியர் குணபாலசிங்கம்

**(பிரபல தொழிலதிபர்)**



மயிலங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் குணபாலசிங்கம் (பிரபல தொழிலதிபர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (07.02.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னியர்-சின்னி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சற்குணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரகாந்தாவின் அன்புக் கணவரும் திருவேரகன், சங்கீதா, திருத்தணிகன், திருச்செந்தூரன் (சுவிஸ்), துவாரகன், ஆகியோரின் அன்புத்தந்தையும் சயிந்தா, திரேஷ்டகுமார், துஷாந்தினி, நவீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரித்திக்கான் அஞ்சனா, அகல்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2025) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 01.06.1947 **மறைவு** 07.02.2025

மயிலங்காடு
ஏழாலை தெற்கு

**தகவல்: குடும்பத்தினர்**
(CR 43060) V-1
077 284 0952, 077 492 4464

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 25 . 08 . 1987

**மறைவு** 07 . 02 . 2025



## இராஜசிங்கம் மோகனரூபன் (மதன், வவா)

**(கிளைமுகாமையாளர் யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்)**

புது வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் மோகனரூபன் (மதன், வவா) நேற்றுமுன்தினம் (07.02.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்-யாழ் மாவட்ட நீதிமன்றம்), புஸ்பராணி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-தங்கமுத்து, தியாகராஜா-அழகரத்தினம் (நீர்வேலி) ஆகியோரின் அன்புப்பேரனும், உமாசுதன் (சுதன்), பகீரதன் (கரன்-நீர்ப்பாசன திணைக்களம், சிலாபத்துறை மன்னார்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம்-ருக்குமணி, இராசேந்திரம்-பாலாம்பிகை (அம்பிகா), நவநீதன் மற்றும்-சர்வேஸ்வரி (கனடா), ஜெகநாதன்-சியாமளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தயாபரன்-செல்வராணி (UK) மற்றும் பூபாலசிங்கம்-சங்கராணி, சிறிராஜபாலன்-யோகராணி (Germany) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், பிரசாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலணை மத்தியகல்லூரி), சிவராஜா-மஞ்சுளா, தில்லைவாசன்-நந்தினி, நந்தகுமார்-சர்மிளா (கனடா), இராமநாதர்-ஊர்மிளா (கனடா), யசோதா, தீபன்-துர்க்காதீபனா (கனடா), ஜேர்மனியைச் சேர்ந்த ராகவி, புராதினி, ராகினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், முகுந்தன் (மருந்துகலவையாளர், தெல்லிப்பளை வைத்தியசாலை)-ஆரணி (ஆசிரியை யா/நீர்வேலி சி.சி.த.பாடசாலை), குருதேவன்-சந்திரமதி (பிரான்ஸ்), Dr.தேவகுமார்-Dr.யசோதா (UK), பார்த்தீபன் (பொறியியலாளர்)-கவிதா (UK), மோகன் (கட்டடகலைஞர்)-கலாநிதி அபிராமி (UK), குருபரன்-தனுசா (UK) ஆகியோரின் அன்பு உடன் பிறவா சகோதரனும், கஜானன் (மாணவன், தரம் 01, யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி), தீசிதன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், கவிஸ்னா, மாதரி (மாணவி தரம் 02, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

44/1 புது வீதி,
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

V-1

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 25 . 02 . 1945

**மறைவு** 07 . 02 . 2025



## செபஸ்தி வில்லியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தி வில்லியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (07.02.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தி-றோசமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாபதி-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணி அவர்களின் பாசமிகு கணவரும் மயூரா (மக்கள் வங்கி), லோரன்ஸ் மயூரன் (கணக்காய்வு உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன் (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்), கார்த்திகா (ஆசிரியர், யா/ஊர் புனித மரியாள் றோ.க மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுருணிக்கா, கேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மேரி யோசை மரிஸ்ரெலா, மற்றும் அல்ஸ்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுஅதனைத் தொடர்ந்து காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 754 5960, 077 844 5578

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அறை வாடகைக்கு

யாழ் நகருக்கு அருகாமையில் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

**075 787 8010**

(CS/57410) J-1

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை. இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/56378) J-1

## சந்திப்பு

நல்லூர் பிரதேச செயலக அரச ஓய்வூதியர் சங்கத்தின் விசேட சந்திப்பும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தில் சங்கத்தின் தலைவர் சு.மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(ம-66)

## மணமகள் தேவை

யாழ் இந்து V 1994ல் பிறந்த நட்சத்திரம் கார்த்திகை 4ம் பாதம் 7ம் இடத்தில் சூரியன் செவ்வாய் பாவக்கிரகம் 69. IT பட்டப்படிப்பு பூர்த்தி செய்து அரசாங்கத்தில் நிரந்தர தொழில்புரியும் (IT officer) மணமகனுக்கு அரசாங்கத்தில் உயர் தொழில்புரியும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்

தொடர்பு:- **076 929 4878**
Whatsapp:- **077 510 5476**

(CS/57398) J-1



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

## அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

(CS/2177) J-1



## ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## கும்பாபிஷேக தினம் - 10.02.2025

## தைப்பூசம் - 11.02.2025

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் "கும்பாபிஷேக தினம்" 10.02.2025 ஆம் திகதி திங்கட்கிழமையும் "தைப்பூச விழா" 11.02.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறவுள்ளன.

**கும்பாபிஷேக தினம் (10.02.2025)**

- காலை 8.00 மணி
  - 1008 சங்காபிஷேகம் (மூலமூர்த்தி அம்பாள்)
  - 108 சங்காபிஷேகம் (எழுந்தருளி அம்பாள்) உருத்திரம் (ஏனைய பரிவார மூர்த்தங்கள்)
- நண்பகல் 12.00 மணி
  - உச்சிக்காலப் பூசை
- பி.ப. 12.15 மணி
  - விசேட வசந்த மண்டப பூசை
- பி.ப. 01.00 மணி
  - அம்பாள் வீதியுலா வருதல்



**தைப்பூசம் (11.02.2025)**

- மு.ப. 9.00
  - 108 சங்காபிஷேகம்
- நண்பகல் 12.00 மணி
  - உச்சிக்காலப் பூசை
- பி.ப. 12.15 மணி - விசேட வசந்த மண்டப பூசை
- பி.ப. 01.00 மணி
  - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்

கும்பாபிஷேக தினம் மற்றும் தைப்பூச விழா என்பன சிறப்பாக நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

# தைப்பூசம்

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

## உலகப் பெருமஞ்சத்திருவிழா



- **காலம்:** 11.02.2025 செவ்வாய்க்கிழமை பால்குடப்பவனி
- **ஆரம்பம் :** காலை 6.00 மணி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்.

## பால்குடப்பவனி

- தைப்பூச தினத்தன்று யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் ஒன்று சேர்ந்து பால்குடத்தினை எடுத்தல் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.
- அடியவர்களின் வசதி கருதி பால், குடம், என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- **ஒரு பால்குட பற்றுச்சீட்டு - 400/-**
- எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் ஆலய கரும பீடத்தில் காலை 9.00 - 11.00, மாலை 4.30 - 6.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**காலை :- மாபெரும் பொங்கல் (09.00 - 2.00 மணிவரை)**

- பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு. பொங்கள் பானை, அகப்பை, பேசின், அரிசி, சர்க்கரை, நெய், தேன், கயு, முந்திரிகை வத்தல், வாழை இலை, பால் விறகு என்பன உள்ளன.
- வெண் பொங்கல் பொதி - 1700 /=
- சர்க்கரைப் பொங்கல் பொதி - 2700/=
- இரவு 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பொருமாண் வீதிவலம் வரும் நிகழ்வும் பாரம்பரிய கலை நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

**அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

............ விளம்பர அனுசரணை............




## TIME TO TRAVEL

*Start discovering the world!*

இலங்கையின் பிரபல பயண முகவர் நிறுவனமான VKR INTERNATIONAL PVT LTD நிறுவனம் அதன் சேவைகளை தமிழ் தாயகம் முழுவதும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது

இதன் பிரகாரம், கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

உங்களுக்கான விமான டிக்கெட், வீசாக்களை எங்கள் நிறுவனத்தின் ஊடாக தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் பெறும் சேவைகளுக்கேற்ப கட்டண கழிவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

- துரித சேவை
- இலவச ஆலோசனை
- சிறப்பு விலை
- VKR EXPRESS

**எமது சேவைகள்**

வீசா
சுற்றுலா வீசா | கல்வி வீசா
வணிக வீசா | மருத்துவ வீசா

விமான டிக்கெட்
சகல நாடுகளுக்கும் குறைந்த விலையில் விமான டிக்கட்டுகளை பெற்றுக் கொள்ளளாம்

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கான பிறப்பு | இறப்பு | விவாகமான விவாகமாகவில்லை என்பதற்கான சான்றிதழ்கள்

தொடர்புகளுக்கு
0770551735
vkagency199@gmail.com
No.176,k.k.s road,periya mathavady, chunnakam
0742183333

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கான விசாக்கள், இரட்டைப் பிரஜா உரிமை மற்றும் குடியுரிமைச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்க ஆலோசனைகள் வழங்கப்படும்.
மற்றும்
கடவுச்சீட்டுக்கான முன்பதிவுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

**அடியவர்கள் அனைவரும் வாரீர்.....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13
.
10
.
1941



மறைவு
08
.
02
.
2025

## கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க ஓய்வுபெற்ற பொது முகாமையாளர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் நேற்று (08.02.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், அருட்குமாரின் சிறிய தந்தையும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணபிள்ளை, இராஜசிங்கம் மற்றும் நவரத்தினம், திலகவதியார், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் குணரத்தினம் காலஞ்சென்ற சிவனேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, சிவனேசச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 943 9002

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(CS/57457) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
27
.
05
.
1952



மறைவு
07
.
02
.
2025

## கதிரவேலு மகாலிங்கம்

(உரிமையாளர் - சிவம் அரைக்கும் ஆலை)

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும், மூத்ததம்பி வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு மகாலிங்கம் நேற்று முன்தினம் (07.02.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைநாயகம் - தங்கமணி தம்பதியரின் மருமகனும், வசந்தராணியின் அன்புக் கணவரும், அனுஷா (லண்டன்) நிறஞ்சன் (சுவிஸ்), நிமலன் (மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அழகேந்திரராசா, செல்வம், பஞ்சலிங்கம் மற்றும் தர்மராசா, தவமணிதேவி, முத்துலிங்கம், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அசோக்குமார் (லண்டன்), பிரியந்தி (சுவிஸ்), கனிதவதனி ( பிரதேச செயலகம் சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷன், அக்ஷயன், ஆரத்தியா, அக்ஷரா, நிகிலன், ஆதுர்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 377 3335

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்

(CS/57449) J-1

### மணமகன் தேவை

1996, இந்து, பூரட்டாதி, NURSE
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11468.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/39736A) J-1

### மணமகள் தேவை

1996, இந்து, உத்திரட்டாதி, TEAM LEADER
பூர்வீகம் - கிளிநொச்சி, வதியுமிடம் - CANADA
மணமகன் பதிவு இல: 11442.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/39736B) J-1

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
.
06
.
1946



உதிர்வு
10
.
02
.
2010

## திருமதி ருக்மணி நடராசா

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று பதின்னைந்து ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

138 A, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்:
நடராசா (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(cs.57455) (N-1)

"ஆத்மார்த்த அர்ப்பணங்கள்"
நெஞ்சத்தே நிறைந்து நீளும்

# ஓராண்டு நினைவலைகள்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

மலர்வு
27
05
1951



உதிர்வு
20
02
2024

"கலாபூஷணம்", "கலைமாமணி", "கலைஞானச்சுடர்"

## கோகிலமணி ஜெகானந்தராஜா

ஓய்வுநிலை ஆசிரியை
( யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,
கிளி.புனித பற்றிமா றோ.க.தமிழ் கலவன் பாடசாலை – உருத்திரபுரம் )

திதி : வளர்பிறை துவாதசி - 09.02.2025

### திதி நிர்ணயப்பா



ஆண்டாம் சோபகிருதில் அமைந்த துவாதசியில்
ஈண்டநல் மாசித்திங்கள் ஈர்நான்கில் - மாண்புயர்
குலவிளக்காம் கோகிலமணி குவலயத்தை விடுத்து
கலந்தனரே கலையரசி கழல்.

சங்கீத நாதமாய் சர்வமும் நிறைந்தீரே!
இங்கிதமே இசையமுதில் இன்புறச் செய்தீரே!
மங்காத மாண்புடன் மிளிர்ந்த மாமணியே!
தங்கக் கோகிலமே! தரணியைத் துறந்தீரோ?

கரிசனையாய் மாணவர்தம் கற்றலைக் கண்ணுற்று
புரிதலுடன் பொற்காலம் பிறந்தோங்க வகைசெய்தீர்!
அரியபல அரங்குகளை அணிசெய் இசைக்குயிலாய்
விரிநிழல் தருமரமாய் வித்தகியாய் வீற்றிருந்தீர்!

அவனியில் அவதரித்து அவனருளால் வாழ்வுற்று
பவமறுத்து இகத்தினை பிரிதலே இறைநியதி
நிவப்புடன் கலையரசி நிறைகழலில் உறைந்து
தவப்பேறு பெற்றுய்ய தினமும் துதிசெய்வோம்!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"வாணிபதம்"
இல.181, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
[illegible] 4993,077 632 1209

நெஞ்சகலா நினைவுடன்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 06 . 1939



மறைவு 07 . 02 . 2025

## சுந்தரலிங்கம் சிவகாமி (பிள்ளை)

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் சிவகாமி அவர்கள் நேற்றுமுன்தினம் (07.02.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், ராம் சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், Dr. வாசுகி (UK), Dr. வசுமதி (யாழ் போதனா வைத்தியசாலை), Dr. வானதி (அவுஸ்ரேலியா), சரவணன் (தலைமை இரசாயனவியலாளர் - தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr. சுதர்ஷன் தம்பிராஜா (UK), Dr.தேவநேசன் (தெல்லிப்பளை, ஆதார வைத்தியசாலை), Dr. ச.வரதன் (அவுஸ்ரேலியா), ச.ஷாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, ஆரபி, மயூரி, மாதுரி, பைரவி, ஆதீஷ், ஆலீஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவன்பாலன், சிவன்நேசன், சிவன்தாசன், சிவன்ரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

சிவன் லொட்ஜ்,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

021 223 0717 (கணவர்)
077 728 7166 (வசுமதி - மகள்)
077 775 6178 (சரவணன் - மகன்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 09 . 1946



மறைவு 07 . 02 . 2025

## முத்துமலர் விஜயரட்ணம்

யாழ். சரவனை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பிரித்தானியா Coventry ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துமலர் விஜயரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் (07-02-2025) வெள்ளிக்கிழமை அன்று Coventry பிரித்தானியாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துராஜா-மனோன்மணி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற முத்துகந்தையா-நீலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,காலஞ்சென்ற கந்தையா விஜயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், ஶ்ரீதரன் (பிரித்தானியா), ஶ்ரீஹரன் (பிரித்தானியா), ஜெயசித்ரா சிவமயூரன் (பிரித்தானியா), வசிஹரன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மயூரன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ராஜேந்திரம், குணதிலகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெகநாதன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற இந்திராணி (அவுஸ்திரேலியா), சந்திரகாந்தா (பிரித்தானியா), அரியரட்ணம் (பிரித்தானியா), கோபிநாதன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற ஈஸ்வரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வித்யன், ஆதித்யன், அஸ்வின், ஆருஷன்ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
ஸ்ரீதரன் - மகன் +447943654650
ஈ ஸ்ரீஹரன் - மகன் +447985768183
வசிஹரன் - மகன் +447985768183
மயூரன் - மருமகன் +447961277728

**தகவல்:**
**மயூரன் (மருமகன்)**

# இலங்கை தொடர்பில் கூடுதல் கண்காணிப்பு

இலங்கை அரசாங்கத்தின் பட்ஜெட் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொஸாக் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வை அடுத்து, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு கடந்த ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி எட்டப்பட்டது. அந்த உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாட்டுக்கு நாணய நிதியத்தின் இயக்குநர் சபை அனுமதியளித்ததன் பின்னர் இலங்கைக்கு 333 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும்.

அதன்படி எதிர்வரும் வாரங்களில் இயக்குநர் சபை கூட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம். அதேவேளை இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்பு செயற்திட்டம் தற்போது வரவேற்கத்தக்க பெறுபேறுகளைத் தந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதேபோன்று கடந்த நவம்பர் மாதம் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாட்டுக்கு நாணய நிதிய இயக்குனர் சபையின் அனுமதி பெறப்படவேண்டும். இருப்பினும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு ஏற்புடைய விதத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றார். (ம)

*யாழ். பல்கலைக்கழக*

# அரசறிவியல்துறைக்கென புதிய தலைவர் நியமனம்

*கலாநிதி விக்னேஸ்வரன் பொறுப்பேற்பு*

யாழ்., பெப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் புதிய தலைவராக கலாநிதி தி.விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவராகப் பேராசிரியர் கே.ரி.கனேசலிங்கம் பல வருடங்கள் பதவிவகித்து வந்தார். இந்த நிலையில் புதிய தலைவராக நேற்று முன்தினம்முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கலாநிதி தி. விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 05 . 1959



மறைவு 06 . 02 . 2025

## கமலாதேவி ரஞ்சமோகன்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி ரஞ்சமோகன் அவர்கள் கடந்த 06.02.2025 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் முத்து தம்பதியரின் மூத்த புதல்வியும், ரஞ்சமோகன் அவர்களின் மனைவியும், சரண்ஜாவின் பாசமிகு தாயும், அமிர்தலிங்கம், லோகலிங்கம், மோகலிங்கம், நிர்மலாதேவி, ஈஸ்வரலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொடிகாமம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 995 0351
077 050 2852

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(CS/57467) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள குளியலறை பொருள்கள் விற்பனை செய்யும் நிலையத்தில் ஊழியர் ஒருவர் நேற்று மாலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த விற்பனை நிலையத்தில் வேலைசெய்யும் இருவருக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கமே இவ்வாறு மோதலாக மாறியுள்ளது என்று தெரியவருகின்றது. சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ம-28-66)

**பணிப் பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய இளம் பணிப் பெண் தேவை

தொடர்பு: 077 298 7506

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

பிரிவு 59

- Diploma in English/ Spoken English/ Business English
- Diploma in ICT/ AI/ Cyber Security
- Diploma in Sinhala
- Diploma in Psychology & Counselling
- Diploma in Business Management
- Diploma in Caregiver / Child Care
- Diploma in Political Science
- Diploma in Digital Marketing
- Diploma in Computeriged Accounting

ஆரம்பம்: 15.02.2025, 10.00Am

காலம்: 03 மாதங்கள் பெறுமதி மிக்க சான்றிதழ்

Thirunelvelyy

IPS To Your Future

தொடர்பு 077 570 4893 / 074 234 9120

## மரண அறிவித்தல்



மலர்வு 18 . 02 . 1959

மறைவு 07 . 02 . 2025

### அமரர் செல்லத்துரை தங்கராசா

**(அரச விருது பெற்ற விவசாய மன்னன்)**

**உரிமையாளர்**

(Thangarasa Farm, The Tradex Pvt Ltd, Travana Capital Ceylon Chai Cafe Pvt Ltd, Grapes Garden)

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கராசா அவர்கள் 07-02-2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை குஞ்சு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சங்கானை நிச்சாமத்தை சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு நாகமுத்து தம்பதிகளின் மருமகனும் மற்றும் கௌரி அவர்களின் அன்புக் கணவரும் தர்ஷிகா, தனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜா (பட்டு), சறோஜா (ரஞ்சனா - கனடா), அம்பிகைராஜா (சுவிஸ்), ஜெயராசா (சுகந்தன்), பபிச்சந்திரன் (பபி-டென்மார்க்), வனஜா, கிரிஜா (நீற்றா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விக்கினராஜா (டென்மார்க்), சின்னராஜா (சுவிஸ்), இராசமணி (நெதர்லாந்து) தவம் (பவுண்-கொலண்ட), சிவம், கலா, மீரா (பிரான்ஸ்) கமலா (சுவிஸ்லாந்து) மற்றும் காலஞ்சென்ற மா.பாஸ்கரசிங்கம் (பொறியியலாளர்-கனடா), Dr.வே.கணேசவேல் (J.P), இ.இராஜன் (கணக்காளர்-கொழும்பு) பாலசரஸ்வதி, ரஜினி (பாமினி - சுவிஸ்), ஜெஜினி, சந்திரகலா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனகேஸ்வரி (டென்மார்க்), மேரிமாசிலா (வசந்தி-சுவிஸ்), காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை துரைசிங்கம் (தவம்) மற்றும் நாகராசா, இராசலிங்கம், வாமதேவன் (பிரான்ஸ்), இராசகுமார் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**(மகன்-தனுஜன்-075 858 8218**

**(மைத்துனர் Dr.கணேசவேல்-077 601 3616**

(CS 2477) V-1

## மரண அறிவித்தல்



மலர்வு 02 . 12 . 1979

உதிர்வு 08 . 02 . 2025

### அமரர் யோகலிங்கம் அருள்நாதன்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகலிங்கம் அருள்நாதன் அவர்கள் நேற்று (08.02.2025) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோகலிங்கம்-ரஞ்சினிதேவி தம்பதியரின் அன்பு மகனும் செ.பற்குணம்-லலிதா தம்பதியரின் அன்பு மருமகனும் பவானி அவர்களின் அருமைக் கணவரும் சிவதீபன் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), பௌஜனன் (மத்தியகல்லூரி), சரண்யா (வேம்படி உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், சுதர்சினி, சுகந்தினி, தனுஷா, சிந்துஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் பத்மரஜனி, பத்மரஞ்சன், கவிப்பிரியன் அகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்தச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு**
**கோப்பாய்**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு : 12.09.1982 இறப்பு : 10.01.2025

### அமரர் ரவீந்திரன் சுதாகர்

**(R.S. ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)**

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை புதுவீதியை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட எங்கள் பாசத்திற்கும் அன்பிற்கும் உரிய அமரர் சுதாகர் அவர்களின் துயரச் செய்தி கேட்டு வந்து உடன் உதவிகள் செய்த யாழ் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த அன்பர்களுக்கும் வைத்தியசாலையில் பணியாற்றிய மருத்துவர்கள், மருத்துவ குழாம் அனைவருக்கும் மரணச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோர் நேரில் வருகை தந்து பங்கு பற்றியோர்க்கும் தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக துயர் பகிர்ந்தோருக்கும், இணையத் தளங்கள் மூலமாக எமது ஆறாத்துயரை உலகம் முழுவதும் பகிர்ந்தோருக்கும் நம் ஊரில் எம் செல்வம் வாழ்ந்த வீட்டிற்கு வருகையும் ஆறுதலும் தந்தோர், மலர் வளையங்கள், மலர்மாலைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வழங்கியோருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் வீட்டில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(CR 44270) V-1

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுக்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

தையிட்டியில் திஸ்ஸவிகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் நாங்கள்தான். நாங்கள் ஒருபோதும் எங்களின் காணிகளை விகாரைக்காக வழங்கிவிட்டு மாற்றுக்காணி பெறுவதற்கு இணங்கவில்லை. அவ்வாறான எந்தவொரு முன்னெடுப் புக்களுக்கும் நாங்கள் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். 'மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கே வழங்கப்படும்' என்று ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார். அப்படியானால், திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள எங்களின் காணிகளும் எங்களுக்கே சொந்தம். எனவே, அந்தக் காணிக்ளை உரிய வகையில் எம்மிடம் ஒப்படைக்குமாறு கோருகின்றோம்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று எமக்குத் தெரிவித்திருந்தனர். ஆனால், இதுவரை அவர்கள் எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தாமல் அமைதியாக இருக்கின்றனர். வடமாகாண ஆளுநர்கூட எம்முடன் பேசிய விடயத்தை உரிய வகையில் ஜனாதிபதியிடம் தெரிவிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எமது காணிகளை மீட்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார். அவருக்கு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பக்கபலமாகச் செயற்படவில்லை.

தையிட்டி திஸ்ஸவிகாரை அமைக்கப்பட்டுள்ள எமது நிலங்களை எம்மிடம் தரவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 11ஆம் திகதி நாங்கள் போராட்டம் நடத்தவுள்ளோம். அதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றனர். (அ-ம-27-26)

## இந்துக்களின்...

அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸுக்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

81 ஓட்டங்கள் முன்னிலையுடன், இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி நேற்றுமுன்தின முதலாம் நாள் முடிவில் இரண்டு விக்கெட்டுகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் கிருஷ்ணராஜ் பரஷித் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

252 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி கொழும்பு இந்துக் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அந்த அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் இருந்தது. இதனால், ஆட்டம் சமநிலையில் நிறைவடையும் என்றே பலரும் கருதினார்கள். ஆனால், இறுதி 7 விக்கெட்டுகளையும் 57 ஓட்டங்களில் இழந்த அந்த அணி 187 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ஆரம்பவீரர் சுரேஷ்குமார் மிதுஷிகன் 77 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீரர் சுதர்சன் ஹற்றிக் உள்ளடங்கலாக 6 விக்கெட்களை வீழ்த்தினார். (அ-ம-இ)

## மஹிந்த...

அவர் வெளியேறினால் நல்லது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'முன்னாள் ஜனாதிபதிகள் மூவர், அரசாங்க வதிவிடங்களை கையளித்துவிட்டனர். இன்னும் மூவரே கையளிக்க வேண்டியுள்ளது. அவற்றைக் கையளிக்குமாறு அறிவித்துவிட்டோம்.

எனவே, மனசாட்சியின் பிரகாரம் கௌரவமாக வெளியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், 'முடிந்தால் வெளியேற்றுங்கள்' என மஹிந்த ராஜபக்ச சண்டித்தனம் காட்டிக்கொண்டிருக்கின்றார். சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், பொதுநிர்வாக அமைச்சிடம், அரச வீட்டை கையளித்துவிட்டு வெளியேறினால் சிறப்பு. மஹிந்த ராஜபக்ச வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்களும் விரும்புகின்றனர். கடிதம்தான் வேண்டுமெனில் அதுவும் அனுப்பிவைக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## பொருளாதார...

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாம் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்தாலும், மீண்டும் எழுச்சியடைவதற்கு முயற்சித்து வருகின்றோம். இதில் ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புப் பிரதானமானது. அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசாங்கம் வழங்கும். இலங்கையின் ஏற்றுமதித் துறையை மேலும் வலுவூட்டி உலகளாவிய சந்தையில் சிறந்த இடத்தைப் பிடிப்பதற்கு நாம் கூட்டாக முயற்சி செய்யவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## 19 1/2 பவுண்...

இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 3ஆம் திகதி பத்தொன்பதரைப் பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன. வீட்டின் உரிமையாளர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையிலேயே, முறைப்பாட்டாளர்களின் உறவு முறையான இளைஞர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, சந்தேகநபர் போதைப்பொருளைக் கொள்வனவு செய்வதற்காகத் திருட்டில் ஈடுபட்டமை தெரியவந்தது. அத்துடன், மேலும் மூன்று இளைஞர்கள் இந்தக் குற்றச் செயலில் தொடர்புபட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்தே அவர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-20-26)

## கட்டைக்காட்டில்...

கேணி கடற்படையினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போதே, மேற்படி கொக்கெய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட போதைப்பொருள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## பாலச்சந்திரன்...

நேர்காணலிலேயே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இலக்குவைத்துத் தாக்கப்படவில்லை. அவர் திட்டமிட்டு சுட்டுப்படுகொலை செய்யப்படவில்லை. உண்மையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையிலான இறுதிக்கட்ட மோதலின் போதே அவர் உயிரிழந்தார். பிரபாகரனின் இளைய மகன் உயிரிழந்த சம்பவம் தொடர்பான தகவல் வந்தபோது எனது தந்தை மஹிந்த ராஜபக்ச கவலையடைந்தார்.

அந்தப் பிள்ளைகள் போரில் நேரடியாகத் தொடர்புபடவில்லை. எனவே, அவர்கள் உயிரிழந்தமையால் மஹிந்த ராஜபக்ச ஆழ்ந்த கவலையடைந்தார். அதுபோல் ஹெப்பெட்டிகொலாவ தாக்குதலின்போதும் மஹிந்த மிகுந்த கவலையுடன் காணப்பட்டார் - என்றார். (அ-ம-44)

**பெண் வேலையாள் தேவை**
கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள மூக்குக் கண்ணாடியகத்திற்கு பெண் வேலையாள் தேவை.
T.P : 076 161 4856
(CS/57462) J-1

**வெல்டிங் வேலையாட்கள் தேவை**
ஆறுகால்மடம் யாழ்ப்பாணத்தில் உள்ள சிற்றி பாம் இற்கு வெல்டிங் வேலையாட்கள் தேவை.
075 944 4601
(CS/57452) J-1

**காணி விற்பனைக்கு**
நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு.
நல்லூர் கோவிலிருந்து 600m
தொடர்பு: 077 794 8012

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி சந்தியில் இருந்து 600m இல் ஆடியபாதம் வீதிக்கு அண்மையாக 2 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு:
077 794 8012

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக K.K.S வீதி வண்ணார் பண்ணை யில் வீடு வாடகைக்கு உண்டு.
077 020 4276
(CS/57450) J-1

**காணி விற்பனைக்கு**
மீசாலையில் 40 பரப்புக் காணி விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:
077 794 8012

**வீடு வாடகைக்கு**
கிளிநொச்சியில் விவேகானந்த நகரில் இரண்டு வீடுகள் வாடகைக்கு உள்ளன.
ஏனையவை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
077 711 1716, 076 860 4501
(CS/2463) J-1

**காணி விற்பனைக்கு**
55 New செம்மணி வீதி
கல்வியங்காட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(கிணற்றுடன்)- tube well,
நல்லூர் கோவில் 1.7 km,
கல்வியங்காடு சந்தி 350m
தொடர்புகளுக்கு:
077 185 4870
(cs.29737) (V.1)

**வாடகைக்கு**
- கஸ்தூரியார் வீதியில் கடை
- நாவலர் வீதியில் 2500 சதுர அடி மேல்மாடி கட்டடம்
- கந்தர்மடம் சந்தியில் காணி என்பன வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு:
021 222 3479, 076 071 2676
(CS 57466) V-1

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வர்த்தக நிறுவனத்திற்கு பில் கிளார்க் (Bill Clerk) மற்றும் பொதி செய்பவர் (Sales Men) வேலைக்கு ஆட்கள் தேவை. 332, Hospital road, Jaffna.
தொடர்பு:- 077 727 0536
(CS/57441) J-1

**காணி விற்பனைக்குண்டு**
திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 m தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 166 3859
077 257 5712

**காணிகள் விற்பனைக்கு உண்டு**
எம்மிடம் கோப்பாய் இராசவீதிக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், கட்டப்பிராய் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 193 3490
Whats App 077 084 0453

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய, வீட்டு நிலம் விற்பனைக்கு

புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
சந்திக்கு அருகாமையில்
உள்ள சுமார் 8 பரப்பு
காணி விற்பனைக்கு.

(CS/2452) J-1

**0044 781 645 5850**

## அறை வாடகைக்கு

யாழ். செயலகத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் A9 வீதி (கண்டி வீதி, பெந்தோகொஸ்த மிசனுக்குமுன்னால்) தனியான குளியல் அறையுடன் அறை ஒன்று ஒரு நபருக்கு வாடகைக்கு உண்டு. பொது விறாந்தையும் பாவிக்க முடியும். வாடகை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(CS/57227) J-1

**076 291 3995**

## காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு சாவகச்சேரி நுணாவில் பொலிஸ் நிலையம். A9 வீதிக்கு அருகாமையில் வீரபத்திரர் வீதியில் 4 1/2 பரப்பு வீட்டுடன் கூடிய காணியும் 1 பரப்பும் 12 குளியும் கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு.

(CS/57407) J-1

Tel :- **076 485 8020**
WhatsApp:- **+94 777 360 995**

## மலிவு விற்பனை

150/- இற்கு விற்பனை செய்யப்படும் அனைத்து பூங்கன்றுகளும் 100/- விற்கு விற்பனை செய்யப்படுகின்றன.

(CS/57439) J-1

**075 944 4601**

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ.து) மூளாய் விண்ணப்பங்கள் கோரல்.

**குடும்ப நல உத்தியோகத்தர் (Midwife)**
- க.பொ.த (உ/த) சித்தி. மகப்பேற்று சித்தி தகைமை சான்றிதழ்
- மகப்பேற்று விடுதியில் ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- தங்குமிட வசதியும் வழங்கப்படும்

**இரத்தம் எடுப்பவர் (Phlebotomist)**
- க.பொ.த (உ/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

**தாதிய உத்தியோகத்தர் - ஆண்,பெண்**
- தகைமை பெற்றவர்கள்.
- மகப்பேற்று பயிற்சி. மகப்பேற்று விடுதியில் ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவமுள்ள தாதிய உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
- இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்
- தங்குமிட வசதியும் வழங்கப்படும்

**சுகாதார உதவியாளர் - ஆண்**
- க.பொ.த (சா/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (IT/Marketing Officer)**
- துறை சார்ந்த சித்தி தகைமை சான்றிதழ்
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

**சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளி**
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

**எலக்ரீசியன் மற்றும் பிளம்பிங் அனுபவமுள்ளவர் (Electrician & Plumber)**
- தகைமை பெற்றவர்கள்.
- துறை சார்ந்த சித்தி தகைமை சான்றிதழ்
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ்களும் இணைத்து பதிவுத்தபால் (தபாலின் இடப்பக்க மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்) மூலமாகவோ. நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (e-mail) 23/02/2025 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும் சம்பளம் நேரில் பேசித் தீரமானிக்கப்படும்.

முகவரி :கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம். மூளாய். சுழிபுரம்.
E-Mall - moolai@yahoo.com
தொலைபேசி இலக்கம் :- 0212250441, 0212250771 , Whatapp No-0771175710
**தலைவர்/ செயலாளர்**
**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம். மூளாய்.** (CR/44247) J-1 09.02.2025

## காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக
சோமசுந்தரம் அவென்யுவில்
3.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/57431) J-1

தொடர்பு:- **076 342 4705**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் வீதி ஓரமாக உள்ள வீடும் 1 பரப்பும் 3 குளியும் கொண்ட காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

(CS/57430) J-1

தொடர்பு:- **077 229 4985**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் இருந்து
சாவகச்சேரி கச்சாய் வீதியில்
1 Km தூரத்தில் உப்புக்கேணி
சந்திக்கு அருகில் 6 பரப்புக்
காணி விற்பனைக்கு.

(CS/57433) J-1

தொடர்பு:- **077 843 5336**

## போராட்டம்

அமெரிக்காவின் அரசநிர்வாகத்தில் இருந்து எலான் மஸ்க் நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு போராட்டங்கள் ஆரம்பித்துள் ளன. (ம)

## மர்மம்

ரஷ்ய அதிபர் புடினை, 'முட்டாள்' என விமர்சித்த ரஷ்யப் பாடகர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன. (ம)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.01.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் இந்திராணி சுப்பிரமணியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (10.02.2025) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
மகன் - தர்மானந்தம் (இணுவில்) - 077 259 2463
மகள்- துர்ஜனி (இணுவில்) - 077 551 5411
மகள்-துஷியந்தினி (இணுவில்) - 077 009 4603
மகன் - முருகானந்தம் (பிரான்ஸ்) - 003 361 562 6508
மகள்- துஷானி (இணுவில்) - 077 463 3491
மகள்- துஷாலினி (சுவிஸ்) - 004 178 673 2015

**குடும்பத்தினர்**
இணுவில் தெற்கு,
இணுவில்.

(CS/57419) J-1




செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
> புல்லறி வாளர் பெருஞ்செல்வம் எல்லில்
> கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
> மருங்கறக் கெட்டு விடும்.
>
> — நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | தை 27 | ஞாயிற்றுக்கிழமை (09.02.2025) | சிகரம் :129

# தையிட்டி விகாரை என்ன செய்யலாம்?



○ நிலாந்தன்

தையிட்டி விகாரை ஒரு தனியார் காணியில் கட்டப்படுறது என்பதனால் அது சட்டவிரோதமானது என்று கூறி அதனை ஒரு சட்ட விவகாரமாக மட்டும் குறுக்குவது தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது அல்ல. அது சட்டப் பிரச்சினை மட்டுமல்ல,அதைவிட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் விவகாரம். இன ஒடுக்குமுறையின் ஆகப்பிந்திய வெளிப்பாடுகளில் ஒன்று. அது ஓர் ஆக்கிரமிப்பு. ஒரு மரபுரிமைப் போர். இலங்கைத் தீவின் சட்டங்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக வளைக்கப்படும் என்பதற்கு அது ஒரு சான்று. 2009க்கு பின்னரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என்பதற்கு அது ஒரு சான்று.

சம்பந்தப்பட்ட சில தமிழர்களின் காணி உரிமை பற்றிய ஒரு சட்டப் பிரச்சினையாக அதை அணுகி,தனிநபர்களுக்குத் தீர்வுகாண்பதன்மூலம் அதைத் தீர்த்துவிடமுடியாது. சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு காணியைக் கொடுத்தோ அல்லது காசைக் கொடுத்தோ அதைத்தீர்த்துவிட முடியாது. அது 2009க்கு பின்னரான இன ஒடுக்குமுறையின் வெளிப்பாடுகளில் ஒன்று. எனவே அதற்குரிய தீர்வும் கூட்டுரிமைகளின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்.

எனவே அந்த விடயத்தை அதற்குள்ள பல்பரிமாணத்தின் அடிப்படையில்தான் அணுகவேண்டும்; முன்வைக்க வேண்டும். அதற்கு அரசியல் தீர்வுதான் தேவை. தையிட்டி விகாரை வடக்கில் உள்ள மிகப்பெரிய கூட்டுப்படைத் தளத்தின் எல்லைக்குள் காணப்படுகிறது. படையினரால் கட்டப்படுகிறது; படையினரால் பாதுகாக்கப்படுகிறது. இலங்கைத் தீவில், தமிழ்ப்பகுதிகளில் அரச படைகளால் பாதுகாக்கப் படாத ஒரு பௌத்த விகாரையாவது உண்டா? அரச போகங்களைத் துறந்து பரிநிர்வாணம் அடைந்த அஹிம்சாமூர்த்தியான புத்தபகவானை இதைவிடக் கேவலமாக அவமதிக்கமுடியாது.

தமிழ் மக்கள் புத்தபகவானைப் புறத்தியாகப் பார்க்கவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் ஏற்கனவே பௌத்தம் இருந்திருக்கிறது. தமிழ்மொழியின் காப்பியகாலம் எனப்படுவது பௌத்த,சமண மதங்களின் காலம்தான். ஐம்பெரும் காப்பியங்களும் பௌத்த சமணக் காப்பியங்கள் தான். எனவே தமிழ் மக்கள் பௌத்தத்தை எப்பொழுதும் ஒரு பகை மதமாகக் கருதியது இல்லை. தமிழ் மக்கள் மத்தியில் எப்பொழுதும் மதப் பல்வகைமை உண்டு. தமிழ்த் தேசியவாதம் என்பது மதப்பல்வகைமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே தமிழ் மக்கள் மதப் பல்வகைமைக்கு எதிரானவர்களில்லை. ஆனால் ஒரு மதத்தை ஆக்கிரமிப்பின் கருவியாகப் பயன்படுத்தும் பொழுதுதான் அது ஓர் அரசியல் விவகாரமாக மேல் எழுகிறது. இங்கு பிரச்சினை மதப்பல்வகைமை அல்ல. மத மேலாண்மைதான். தையிட்டி விகாரை என்பது மத மேலாண்மையின் ஆகப் பிந்திய குறியீடு. கிண்ணியாவில் ஒரு புத்தர் சிலையானது விவகாரமாக மேலெழுந்த பொழுது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியதுபோல, "புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நகர்த்தும்" ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை அது.

உள்ளூர் மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமல் படைமையநோக்கு நிலையிலிருந்து படையினரால் கட்டப்பட்ட ஒரு விகாரை அது. ஒருவிதத்தில் இராணுவமயமாக்கலின் குறியீடும்தான். எனவே அந்த விடயத்தில் ஆக்கிரமிப்பு ஒன்றை எப்படிக் கையாள்வது என்றுதான் சிந்திக்கலாம். ஒரு வணக்கத் தலத்தை அகற்றலாமா என்ற கேள்வி வரும். அது மத உணர்வுகளைப் புண்படுத்தும் என்ற வாதம் முன்வைக்கப்படும். ஆனால் அதற்கு மதப்பரிமாணம் மட்டும் கிடையாது. அதைவிட ஆழமாக அதற்கு ஒரு படைப்பரிமாணம் உண்டு. படையினரால் வெற்றி கொள்ளப்பட்ட ஒரு நிலத்தில் அது கட்டப்படுகிறது. அதற்குள்ள படைப்பரிமாணம்தான் இங்கு பிரச்சினை. அது கட்டப்படும் பிரதேசம் பலாலி ,காங்கேசன்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கூட்டுப்படைத் தளப் பகுதி ஆகும். அப்பெருங் கூட்டுப்படைத்தளம் உருவாக்கப்பட்ட பொழுது அங்கே ஏற்கனவே இருந்த இந்து, கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்கள் சுவடின்றி அழிக்கப்பட்டுள்ளன அல்லது சிதைக்கப்பட்டுள்ளன. அக்கூட்டுப் படைத்தளம் பெருப்பிக்கப்படுகையில் இந்து மற்றும் கிறிஸ்தவ மதப் பிரிவினரின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பலாலி, காங்கேசன்துறை கூட்டுப் படைத்தளப் பகுதிக்குள் மட்டும் சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம், சடையம்மா மடம், சுக்கிரதார திரிகோண சத்திரம் ஆகிய இந்துக் கட்டுமானங்கள் ஒரு காலத்தில் இருந்தன. சுக்கிரதார திருகோண சத்திரம் எனப்படுவது 1800களில் ஒரு சித்தரால் கட்டப்பட்டது. சூரிய உதயத்தைத் தரிசிக்கும் ஒரு வழிபாட்டு மையமாக அது இருந்தது. அப்பகுதி இப்பொழுது படையினரால் நிர்வகிக்கப்படும் தல்செவன சுற்றுலா விடுதிக்குள் விழுங்கப்பட்டு விட்டது. கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அருகே ஆதிச்சிவன்கோவில் காணப்பட்டது. அந்த மாளிகைக்குப் பின்பக்கம் உச்சிப் பிள்ளையார் கோயில் இருந்தது. அந்தச் சூழலில் பாதாள கங்கை என்று அழைக்கப்படும் வழிபாட்டு முக்கியத்துவம் மிக்க ஒரு தீர்த்தக் கிணறு இருந்தது. அங்குள்ள கடற்படையினரின் படைத்தளப் பிரதேசத்துக்குள் முன்பு கதிரவளி முருகன் கோவில் இருந்தது. அப்பகுதி மக்கள் கதிர்காம யாத்திரையை அங்கிருந்துதான் தொடங்குவதுண்டு. இவை இந்துமத வழிபாட்டிடங்கள்.

இவை போல கிறிஸ்தவ மத வணக்கத் தலங்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பலாலியில் இருந்த சென். செபஸ்டியன் தேவாலயம், மயிலிட்டியில் காணிக்கை மாதா தேவாலயம், அந்தத் தேவாலயத்திற்கு அருகே இருந்த திருக்குடும்பக் கன்னியர் மடம், மயிலிட்டிக் கடற்கரையில் வேளாங்கண்ணி மாதா ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தையிட்டி விகாரை கட்டப்பட்டுவரும் கூட்டுப் படைத்தளப் பிரதேசத்துக்குள் காணப்பட்ட ஏனைய மதக்கட்டுமானங்கள் இவை. இவை தொடர்பாக மதப் பெரியார்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டிவருகிறார்கள். இவ்வாறு போர்க்காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு பெரும் படைத்தளத்துக்குள் ஏற்கனவே இருந்த பௌத்தம் அல்லாத மத வழிபாட்டு நிலையங்களை அழித்துவிட்டு, அல்லது சிதைத்து விட்டு, அல்லது அப்பகுதிக்குள் பக்தர்கள் செல்வதற்கு அனுமதியை மறுத்துவிட்டு, ஒரு விகாரையை அங்கே கட்டுவதுதான் இங்கு பிரச்சினை.

சிங்கள பௌத்தம் அல்லாத ஏனைய வழிபாட்டிடங்களை தடயமும் இல்லாமல் அழிப்பது என்பது இலங்கைத் தீவின் நவீன அரசியல் வரலாற்றின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகும். புழக்கத்தில் உள்ள வழிபாட்டிடங்கள் மட்டுமல்ல, தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் உள்ள வழிபாட்டிடங்களையும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் விட்டுவைக்கவில்லை. அமெரிக்காவில் வசிக்கும் கலாநிதி சுஜாதா அருந்ததி மீகம என்ற புலமையாளர் தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் எவ்வாறு இந்துமத மரபுரிமைச் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். காலனித்துவ ஆட்சிக்காலத்தில்19ஆம் நூற்றாண்டில் பொலநறுவையில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி தொடர்பான அறிக்கைகளில் பல சிவாலயங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன என்றும் ஆனால் பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுபட்ட பின் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி அறிக்கைகளில் மேற்படி சிவனாலயங்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்றும் சுஜாதா அருந்ததி மீகம கூறுகிறார். இது முழுக்க முழுக்க ஒரு பண்பாட்டு இன அழிப்பு. இலங்கைத் தீவின் நவீன அரசியலின் ஒரு பகுதி அது.

எனவே அந்த வரலாற்றுப் படிப்பினையின் அடிப்படையில் தான் தையிட்டி விகாரை குறித்து முடிவெடுக்கலாம். அதை அதற்குரிய அரசியல் பரிமாணத்தோடுதான் அணுக வேண்டும். தனியே மதத்துக்கு ஊடாகவோ அல்லது சட்டத்துக்கூடாகவோ மட்டும் அணுகமுடியாது. அதற்கு அரசியல் தீர்வுதான் வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இன முரண்பாடுகள் இல்லை என்று கூறுகிறது. ஆனால் அந்த விகாரை இன முரண்பாடுகளின் குறியீடு. 2009 க்குப் பின் இனங்களுக்கிடையே, மதங்களுக்கு இடையே, மொழிகளுக்கிடையே மெய்யான பொருளில் நல்லிணக்

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 பெப்ரவரி 2025

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும் – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சங்கப் புலவர்களினால் சிருஷ்டிக்கப்பட்டவை. கருத்துவளம் நிரம்பியவையாகவும் பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாத நிலையில் அமைந்தவையாகவும் குறிப்புப்பொருள் மிக்கவையாகவும் அமைந்துள்ளன.

18ஆம், 19ஆம் நூற்றாண்டில் வேறுபட்ட கால இடைவெளியில் ஏடுகளில் மாத்திரம் இருந்த சங்க இலக்கியங்கள் சரவணப்பெருமாளையர், உ.வே சாமிநாதையர், ராகவையங்கார், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ஈழத்து சி.வை தாமோதரப்பிள்ளை, சௌரி பெருமாளரங்கன் போன்றவர்களால் அச்சுப்பதிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

ஐரோப்பியரின் வருகையின் பின்னர் ஆங்கிலக் கல்வியின் வருகையும் அதன் வளர்ச்சியும் மற்றும் அச்சு இயந்திரங்களின் கிடைப்பனவுகளும் கல்விப்புலத்தில் பாரிய அளவிலான மறுமலர்ச்சியினை ஏற்படுத்தின. "தமிழரின் வரலாறு" என்னும் நூலில் சங்கம் என்று எதுவொன்றும் இருந்திருக்கவில்லை, அவை கற்பனையின் வழிதனில் தோன்றியவை என்று பி.டி சீனிவாச ஐயங்காரும், "பழந்தமிழர் கால அட்டவணை" என்னும் நூலில் சங்கம் இருந்தமையை நம்பமுடியவில்லை என்றும் அவை பிற்காலத்தில் எழுதிச்சேர்க்கப்பட்டவை என்று சிவராஜபிள்ளையும் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இக்கருத்துக்கு மாறாக ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு, கீழடி, கொடுமானல் போன்ற தொல்லியல் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் பண்டைய தமிழன் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றன. சங்ககாலம் என்பது சிந்துவெளி நாகரித்தின் ஒரு நீட்சியே என்பது அகழ்வு ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



02

### சங்ககாலப் பெண்பாற் கவிஞர்களும் கவிதைகளும்

தமிழ்மொழியில் காணப்படுகின்ற மிகத்தொன்மையான இலக்கியங்களான சங்கப்பாடல்கள் ஈழத்துப்பூதந்தேவனார் உட்பட 473 புலவர்களால் பாடப்பெற்ற மொத்தம் 26,350 வரிகளைக் கொண்ட 2,381 பாடல்கள். 18 நூல்களுக்குள் உள்ளடங்கியிருக்கின்றன.

முருகேச பாண்டியன் எழுதிய "சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள்" என்னும் படைப்பில் சங்ககாலத்தில் கவியார்த்த பெண் கவிஞர்களினை இனங்கண்டு அக்கவிதைகளுக்கான பொழிப்புரையினை மிகத்தெளிவாக வழங்கியுள்ளார். அவருடைய படைப்பில் 41 பெண்பாற் புலவர்க ளினை இனங்கண்டுள்ளார். எனினும் பெண் கவிஞர்களின் எண்ணிக்கை குறித்து முரண்பட்ட கருத்து நிலவுகின்றது. உதாரணமாக உ.வே.சாமிநாதையர் 38 பெண்பாற் கவிஞர்கள் என்றும் வையாபுரிப்பிள்ளை மற்றும் ஔவை துரைசாமி போன்றவர்கள் முறையே 30, 34 என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (முருகேச பாண்டியன், 2005 ப.8)

சங்ககாலத்தில் பெண்கள் எழுத்தறிவைக் கொண்டிருந்ததுடன், பல்வேறு வகையான சமூகப்பணிகளிலும் ஈடுபட்டனர். மேலும் சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக அமைப்புக் காணப்பட்டது. எனினும் பக்தி இலக்கிய காலத்தில் பெண்கள் குறித்த பார்வையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பெண்களின் பணிகள் மனைக்குரிய கடமைகளினை நிறைவுசெய்வதுடன் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. (அறவணர்,1994). பெண் என்பவள் ஆணின் அரவணைப்பில் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பின்னர் வந்த பாரதியார் மற்றும் பாரதிதாசன் போன்றவர்களின் படைப்புகள் பெண்கள் தொடர்பாக சமூகம் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளினைத் தகர்த்தெறிந்தன.

சங்கப் பெண்பாற் புலவர் பாடல்களில் சங்கப் பெண்பாற் புலவர்களின் கவித்துவமான கருத்துச் செறிந்த கவிதைகள் வழியே பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறையினைப் புரிந்துகொள்ளுதல் சிறப்புமிக்கது. பரந்த பாரினிலே பல்வேறு பண்பாட்டுக் கோலங்களையும், நம்பிக்கையினையும் உடைய இனக்குழுக்களாக வியாபித்திருந்த மக்கள் கூட்டத்தினை தமிழ் எனும் மொழி இணைத்தது. தமிழினை ஒரு மொழியாக மட்டும் நோக்காது இனத்தின் அடையாளமாக நோக்கப்படுகின்றது. மேலும் தமிழ்மொழியினைச் சிறப்பிக்கும் வகையில் அமைந்தவையே சங்க இலக்கியங்கள். இவற்றில் 181 பாடல்களினை பெண்பாற் புலவர்கள் இயற்றியுள்ளார்கள். இக்கட்டுரையில் பெண்பாற் புலவர்களின் பாடல்வரிகளின் மூலம் வாழ்வியலை அவர்கள் எவ்வாறாக புரிந்துகொண்டார்கள் என்பது இலக்கியச்சான்றுகளுடன் ஆய்வில் விபரிக்கப்பட்டுள்ளது.

### இல்லறம்

குடும்பம் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நிறுவனத்தின் வழியே வாழ்வியல் என்னும் கலை வளர்ந்து விரிந்து சென்றது என நவீன மேற்கத்தேய உளவியலாளர்கள் கருதுகின்றனர். பண்டைய தமிழர்களின் குடும்ப வாழ்க்கையானது வீரம், காதல், அறம், அன்பு போன்ற பல்வேறு சிறப்பம்சங்களின் உறைவிடமாகவுள்ளது. தமிழர் வாழ்வியலைப் பற்றி வீரம், காதல், அன்பு, அறம், காமம், விருந்தோம்பல் போன்றவற்றின்வழி நோக்குதல் பொருத்தப்பாடுடையதாகும். தமிழர்களின் வாழ்க்கை அறத்துடன் பின்னிப்பிணைந்தது. அறநெறிவழி பயணிப்பதாக அமைந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

செய்வினை எடுத்த மறுநாள் பின்னேரம் அம்மா என்னையும் கூட்டிக் கொண்டு சரவணையப்பா வீட்ட போனா. அப்ப எங்கட ஊரில விஷக்கடிக்குப் பார்வை பாக்கிறதிலை சரவணையப்பா தான் வலுபேமஸ். தெடுத்தனைத் தெருவால போய்க் கார்க்காரக் கனகண்ணை வீட்டடியால திரும்பி மேற்காகப் போகத் தெற்கால ஒரு முடக்கு வரும். அந்த வழியே போனால் சரவணையப்பாவின்ர கோயிலோட சேர்ந்திருக்கிற வீடு வரும். அது ஒரு பெரிய வளவு. அதின்ர வட மேற்கு மூலையிலதான் சரவணையப்பாவின்ர பெரிய தம்பிரான் கோவிலிருக்கு. அதுக்குப் பூசையாக்கிறதும் அவர்தான். வளவின்ர தென்கிழக்கா அவரின்ர வீடிருந்தது. நானும் அம்மாவும் அங்க போனாப்போல அவர், "என்ன புதுவழியாக் கிடக்கு, என்ன சங்கதி?" எண்டு கேட்டார். அம்மா ஆதியோடந்தமாய் விசயத்தைச் சொன்னாப்போலை அவர் "எனக்குக் கடும் சுகவீனம் வந்ததோட உதையெல்லாம் விட்டுட்டன். ஏதோ நான் விளக்கு வைக்கிற பெரியதம்பிரான் என்னைச் சுகப்படுத்தி மறுபிறவி எடுத்ததைப்போல உயிரோட கொணந்து நடமாடவிட்டிருக்கிறான். வீடுதேடி வந்திருக்கிறியள், மறுக்கேலாது, எங்கை அந்த வினைப்பகுதியைத் தாங்கோ பாப்பம்" எண்டார். அம்மா எடுத்துக்குடுத்தா. அவர் அதை வாங்கிப் பிரிச்சுப் பாத்திட்டு, "உவ்...உவ்... எந்தப் படுபாவியம்மா இதைச் செய்தவன்? குடும்பம் சீர்குலைஞ்சு இவ்விடத்தை விட்டெழும்பித் தெருத்தெருவாய் அலையவேணும் எண்டு செய்திருக்கம்மா! இதை வீட்டிலை வைச்சிருக்கிறதே பெருங்கேடு. வாற வெள்ளிக்கிழமை சந்நிதியானிட்டப்போய் விழுந்து கும்பிட்டுட்டு தொண்டைமானாற்றில இதைப் போட்டுட்டு வாங்கோ. அதுவரைக்கும் இதைப் பசும்பாலில போட்டு வையுங்கோ" எண்டு சொல்லி அம்மாட்டத் திருப்பிக்குடுத் தார்.

16

அவரின்ர வீட்டுச்சுவரில ஓர் ஆறுபடை வீட்டுக் கோலத்தில வள்ளி, தெய்வானை சமேதராகக் காட்சியளிக்கிற முருகன் படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அப்ப எனக்கு ஒரே முருகன் படம் சேர்க்கிற பைத்தியமிருந்தது. அதால நான் அங்கை போனதிலயிருந்து அந்தப் படத்தையே பாத்துக்கொண்டு நிண்டன். சரவணையப்பா அதைப்பாத்திட்டு, "ஐயாவுக்கு முருகனில நல்ல வாரப்பாடுபோல கிடக்கு!"எண்டு கேட்டார். நானும் ஓமெண்டு தலையாட்டினன். "ஐயாக்கு உந்தப்படம் வேணுமோ?" எண்டு ஒரு சிரிப்போட தொடர்ந்து கேட்டார். அதுக்கும் ஓமெண்டு தலையாட்டினன். உடனை அதைச் சுவரிலயிருந்து கழட்டி என்னட்டத் தந்து,"ம்... பவுத்திரமாகக் கொண்டுபோய்த் தாயறையில வைச்சுக் கும்பிடுங்கோ!" எண்டார். எனக்கு மூக்குமுட்டின புளுகம். "எடேய் வந்த இடத்தில உதென்ன பழக்கம்?" எண்டு அம்மா கொஞ்சம் அதட்ட வெளிக்கிடச் சரவணையப்பா இடைமறிச்சு,"ஏனம்மா ஐயாவைக் கோவிக்கிறியள்? இது நல்ல பிள்ளைக்கழகு. தெய்வ பக்தியோடயிருக்கிற இந்த வயதுப்பிள்ளையளைக் காணுறதே அபூர்வம். அதுகும் ஐயாவுக்கு முருகையாவில வலுவாரப்பாடாக்கிடக்கு. அதை நாங்கள் போற்ற வேணுமம்மா" எண்டு எனக்குப் பெரிய சப்போர்ட் பண்ணினார்.

எனக்கு அவரை நல்லாப் பிடிச்சுக்கொண்டுது. முதல்ல அந்த நெடுநெடுத்த கறுவல் மொட்டையராயிருந்த அவரின்ர தோற்றம் எனக்குப் பயத்தை ஏற்படுத்திச்சுது. பிறகுதான் ஒராளின்ரை தோற்றத்துக்கும் குணத்துக்கும் சம்பந்தமேயில்லையெண்டு எனக்கு முதன்முதலா விளங்கிச்சுது. பொழுதுபடேக்குள்ளதான் நானும் அம்மாவும் அங்கையிருந்து வெளிக்கிட்டு வீடு வந்துசேர்ந்தம். நவண்ணாவின்ர தாய் நாங்கள் வாறதைக் கண்டிட்டு வந்து, "என்னவாம் சரவணை?" எண்டு அம்மாவிட்ட கேட்டா. அம்மா ஆதியோடந்தமாய் எல்லாத்தையும் சொன்னா. அதைக்கேட்டிட்டு அவா, "உதுக்கெல்லாம் நாள் பாக்காமல் நாளைக்கே சந்நிதியானிட்டப் போய் விசயத்தை முடி" எண்டு சொன்னா.

(தொடரும்)

சஞ்சீவி சிறுகதை

# கைலாயமலையில் ஓர் காட்சி

பா.பாலாஜினி



கைலாயமலையில் ஒரு காட்சி. எம்பெருமானின் பிராட்டி ஏதோ யோசனையில் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார். அவரின் விரிந்த கார்கூந்தலில் இருந்து வீழ்ந்த சில மலர்களை அணிற்பிள்ளை ஒன்று வேகவேகமாகச் சேகரித்துக்கொண்டோடியது. அப்போது தான் குளித்துமுடித்துவிட்டு காலை உணவிற்காகத் தேவியைத் தேடிவந்திருந்த எம்பெருமான் இதனைக் கண்டு கொண்டார். அவருக்கு நடந்த அனைத்தும் தெளிவாக விளங்கியது. என்ன தேவி நாரதர் வந்துவிட்டுப் போகிறாரோ? என்றார் எம்பெருமான். எம்பெருமானின் குரல் தேவியின் சிந்தனையை இடைமறித்தது. "நாதா, முற்றும் அறிந்தவரே நாரதர் வந்து கூறியது உண்மைதானா? நம் வாயுவின் மூத்த புதல்வி வங்கக்கடலில் புயலாக மாறியிருக்கின்றாளாமே? தந்தை மேல் கோபம் கொண்டு அவ்வாறு அவள் மாறியதாக நாரதர் கூறியது உண்மை தானோ?" என்றார் தேவி. தேவியின் தலையில் செல்லமாகக் குட்டியவாறே, "நம் நாரதரைப் பற்றித் தெரியாதோ தேவி? யாகினி ஒன்றும் தந்தை வாயுவின் மேல் கோபம் கொண்டு அவ்வாறு மாறவில்லை. அவளது வயது அப்படி இருக்கின்றதே. விடலைப் பருவத்தில் எல்லோருக்கும் வருவது போல் அவளுக்கும் மக்கள்மீது கோபம் வந்திருக்கின்றது. தந்தை மறித்தும் கேக்காது புறப்பட்டிருக்கின்றாள். நம் நாரதரும் அவளை லேசாகத் தூண்டிவிட்டிருக்கிறார்" என்றார் எம்பெருமான். சிவன் கூறியதைக் கேட்டு மேலும் பதற்றமடைந்த தேவி அவரை நோக்கியவாறே "மக்கள் பாவமில்லையா? சிரமப்படப் போகிறார்களே? அவள் புறப்பட்டுவிட்டால் அவளின் நெருங்கிய தோழி மழையும் கூடவே சேர்ந்து கொள்வாளே? சிவனே நம் உயிர்களுக்கு ஆபத்தல்லவா இது?" என்றாள் தேவி. "தேவி, பதற்றம் வேண்டாமே. எது நடக்க வேண்டுமோ அது நடக்கட்டும். எனக்கோ பசி வயிற்றைக் கிள்ளுகிறது. உணவெடுத்து வாருங்கள்" என்று எம்பெருமான் சாவதானமாகக் கூறினார்.

யாகினியோ வங்கக் கடற்பரப்பில் மிக வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தாள். அவள் அலையெனப் புரளும் நீளக்கூந்தல் கடல் அலைகளை வாரிச்சுருட்டிப் பந்து போலாக்கி மேலும் கீழுமாக எறிந்துகொண்டிருந்தது. அவள் சேலை நுனியில் சிக்கிக்கொண்ட மேகத்திவலைகள் எட்டுத் திக்கும் மழையெனத் திரண்டு தெறித்துக்கொண்டிருந்தன. என்ன செய்வது எப்படித் தண்டிப்பதென்றெல்லாம் அவள் சிந்திக்கவேயில்லை. சிந்திக்கக்கூடிய வயதும் அவளுக்கு இருக்கவில்லை. கால்போன போக்கில் அவள் சுழலத் தொடங்கியிருந்தாள். மேகம் இருண்டு முழு உலகும் ஸ்தம்பிக்கின்ற நிலைக்கு அவள் ஒரு காரணமாக இருந்தாள். கடல்வாழ் உயிரிகளில் நுண்ணங்கியில் இருந்து மிகப்பெரிய உயிரிவரை அத்தனையும் பயந்து ஆட்டமின்றிப்போய் ஒளிந்து கொண்டன. இது எதையுமே அறிந்திராத வங்கக்கடலை அண்டிய நாடுகளின் காலநிலை மற்றும் புவியியல் அறிஞர்கள் எல்லோரும் தத்தமது திறமையைக் காட்டிட கிடைத்த சந்தர்ப்பம் இது எனக்கருதி யாகினி செல்லவிருக்கும் பாதையினையும் அவளது வேகத்தையும் கணித்து அறிவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களின் அறிவித்தலின் பிரகாரம், தாழ்ந்த பிரதேசங்களில் குடியிருந்த மக்கள் வேறு பிரதேசங்களிற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான உலர் உணவுப்பொதிகளும் வேறு அத்தியாவசியப் பொருள்களும் தயாராகிக்கொண்டிருந்தன.

யாகினி தான் செல்லுமிடமெல்லாம் தன் நெருங்கிய தோழி மழையையும் அழைத்துக்கொண்டு பயணப்பட்டுக்கொண்டிருந்தாள். ஆழ்கடலில் இருந்து புறப்பட்ட அவளுக்கு உயிர்கொண்டதற்கும், உயிர்கொள்ளாததற்கும் வேறுபாடெதுவும் இருக்கவில்லை. அதனை கணக்கெடுக்கும் நிலையிலும் அவள் இல்லை. ஆறுகள் பெருகின. அணைக்கட்டுக்கள் உடைந்தன. வேர் கொண்ட பெருமரங்களெல்லாம் சுழன்றடித்துச் சரிந்தன. அவ்வாறு சரிந்த மரங்களினையெல்லாம் சுற்றியெடுத்து தூக்கி வீசிக் கொண்டிருந்தாள் யாகினி. இரக்கமென்பதேயில்லாத அவளின் செயற்பாடுகளைக் கண்டு பூமித்தாயாகிய எம்பெருமானின் பிராட்டி கண்ணீர் வடித்துக் கதறினாள்.



அலைவெள்ளத்தில் அள்ளப்பட்ட உயிர்களின் எண்ணிக்கையோ உயர்ந்துகொண்டேயிருந்தது. நிலைமை கைமீறிப் போவதனை அறிந்த அவள் நாரதரைக் கண்டால் ஏதும் பலன் கிடைக்குமென எண்ணி அவரைச் சந்திக்க முயற்சித்தபோதும் அது கைகூடவில்லை. மீண்டும் சிவனிடமே தஞ்சமடைந்தாள். "நாதா, நிலைமையை எப்படியாவது கட்டுக்குள் கொண்டுவாருங்கள்.

உயிர்கள் படும் வேதனையைப் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியவில்லை" என சிவனிடம் மன்றாடினாள் தேவி.

"தேவி, யாகினியைக் கட்டுப்படுத்த ஒருவழிதான் இருக்கின்றது. தங்கள் கூந்தலில் நிதமும் சூடுகின்ற சம்பங்கி மலர்களை எடுத்து யாகினி மீது தூவினால் அவள் கோபம் அடங்கிடக்கூடும் எனக் கூறினார் எம்பெருமான். ஐயோ நாதா நான் கூந்தல் முடிந்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டனவே. இரண்டு நாள்களுக்கு முன் கூந்தலில் சூடிய மலர்களை நான் எங்ஙனம் சென்று தேடுவேன்" என்றாள் தேவி.

"நான் அறிவேன் தேவியே," என நாரதர் புன்னகையுடன் பிரசன்னமானார் அங்கே. நாரதரே சொல்லும் அந்த மலர்கள் எங்கேயிருக்கின்றன? எனக் கேட்டாள் தேவி. "வேறெங்கிருக்கக்கூடும் தேவி. கைலாயமலையிலே தாங்கள் செல்லமாக வளர்த்துவருகின்ற எலிப்பிள்ளை தான் அவற்றைக் கொண்டுசென்றிருக்கின்றது." என்றார் நாரதர். நாரதர் கூற்றின் பிரகாரம் எலிப்பிள்ளை அங்கே வரவழைக்கப்பட்டது. "எலிப்பிள்ளையாரே, என் கூந்தலில் இருந்து விழுந்த சம்பங்கி மலர்கள் எங்கே [illegible]" என்றாள் தேவி.

அதற்கு "மன்னியுங்கள் தேவி ,அவற்றில் ஒன்றை மட்டுமே நான் வைத்திருக்கின்றேன். மற்றைய இரண்டில் ஒன்றை மனைவிக்கும் மற்றையதை மகளுக்கும் விளையாடக் கொடுத்துவிட்டேனே" என்றது எலிப்பிள்ளை. எலிப்பிள்ளையின் பதிலைக் கேட்டு பிள்ளையாருக்குச் சிரிப்பு வந்தது. இருந்தும் நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து அவர் சிரிப்பினை அடக்கிக்கொண்டார்.

தேவியின் கட்டளைப்படி எலிப்பிள்ளை தன்னிடமிருந்த சம்பங்கி மலரினைத் தேவியிடம் கொடுத்துவிட்டு மற்றதை மனைவியிடமிருந்தும் மகளிடமிருந்தும் வாங்கி வருவதாகக் கூறி உறுதியளித்துச் சென்றது. எலிப்பிள்ளையிடமிருந்து பெற்ற ஒரேயொரு சம்பங்கிமலரினை தேவி யாகினிமேலே தூவினாள். யாகினியின் கோபமும் வேகமும் சற்றே குறைந்தது. தான் வந்த பாதையெங்கும் நேர்ந்த அழிவுகளைக் கண்ணுற்று அவள் மலையுச்சியின் மீதமர்ந்து அழுது கொண்டிருந்தாள். தேவி வீசிய சம்பங்கிப்பூ அவள் மீது மாலையாக விழுந்திருந்தது.

மனிதர்கள் மீது கொண்ட கோபத்தில் தானும் அவர்களைப் போலவே சிந்திக்காமல் செயற்பட்டிருப்பதை எண்ணி வருத்தப்பட்டாள் யாகினி. இதேநேரத்தில் இரவுநேர வானிலை அறிக்கைகளிலெல்லாம் புயலின் வேகம் குறைந்திருப்பதனால் அது கரையைக் கடக்கும் நேரத்திலும் மாற்றம் ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

கைலாயமலையில் எலிப்பிள்ளையாரின் பாடோ மிகத் திண்டாட்டமாக இருந்தது. மனைவியிடம் கொடுத்த சம்பங்கிப் பூவினை வாங்கிவிட்டது. ஆனால் மகளிடம் கொடுத்ததை வாங்கமுடியவில்லை. அவள் அதைத் தரமாட்டேன் என அடம்பிடித்துக் கொண்டிருந்தாள். விசயம் தேவியினூடாக சிவனின் காதுகளுக்குச் சென்றடைந்தது. சிவனோ அருமையான ஒரு யோசனையைக் கூறினார். "தேவி, ஒன்றும் பிரச்சனை இல்லை. இரண்டாவது சம்பங்கி மலரையும் தங்கள் கையால் யாகினி மீது தூவுங்கள். மூன்றாவதை நம் கைலாயமலையின் எலிக்குஞ்சு தனது கையினால் தூவட்டும் என்றார். அப்படியே இரண்டாவது சம்பங்கி மலரினை தேவி யாகினி மேலே தூவினாள்.

மலையுச்சி மீது அமர்ந்தபடி அழுதுகொண்டிருந்த யாகினி மேல் இரண்டாவது மாலையும் விழுந்தது. அவள் குளிர்ந்தாள். குழப்பமும் அடைந்தாள். செய்யும் வழியறியாது திகைத்தாள்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமே வாழ்வாக...!



குழந்தை சண்முகலிங்கம் இலங்கைத் தமிழ் நாடக உலகின் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர். 'குழந்தை' என்ற பெயரில் அறியப்பட்ட குழந்தை சண்முகலிங்கம் தனது 93 ஆவது வயதில் இந்தவருடம் ஜனவரி 17 ஆம் திகதி காலமானார்.

நாடகம் பற்றிய புரிதல்கள் அற்ற வேறு பலருக்கு அவர் ஆரவாரமற்ற தன்னடக்கம் நிரம்பிய ஒருவர். உண்மையிலும் குழந்தை சண்முகலிங்கம் என்ற பெயர் இலங்கைத் தமிழ் நாடக உலகுடன் ஒன்றிவிட்ட பெயர். இலங்கைத் தமிழ் நாடக உலகின் கடந்த தசாப்தங்களை அவரின் பெயரை விட்டுவிட்டுப் பேசமுடியாது. புகழ்ச்சியையோ விளம்பரத்தையோ விரும்பாத அவர் 2015 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இந்த நேர்காணலை ஏற்றுக்கொண்டிருந்தார்.

நேர்கண்டவர்: துளசி முத்துலிங்கம்
மொழிபெயர்ப்பு: தேவ அபிரா

**கே: எப்படி நீங்கள் "குழந்தை" என்னும் வித்தியாசமானதொரு "செல்லப்பெயரை" பெற்றுக்கொண்டீர்கள்?**

ப: எனது குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள். அவர்களுள் நானே இளையவன். அதுமட்டுமல்ல எனது அம்மா மற்றும் அப்பாவின் சகோதர்களின் குடும்பத்தில் இருந்த பிள்ளைகளிலும் நானே சிறியவன். இதனால் குடும்பத்திலும் உறவினர்களிடையேயும் நான் குழந்தையானேன். எனது பெயரும் அப்படியே நிலைத்துவிட்டது. அதுமட்டுமல்ல வெட்கமும் முன்னுக்குப் பயும் குணமுமற்று அம்மாவின் சேலையைப் பிடித்துக் கொண்டு திரியும் "குழந்தை"யாகவும் இருந்தேன்.

**கே: நாடக உலகத்திற்குள் எப்படி இணைந்தீர்கள்?**

ப: நாடக உலகத்துக்குள் நான் வந்தது உண்மையிலும் ஒரு விபத்து. இன்னும் சொல்லப்போனால் நாடக உலகத்துள் வலுக்கட்டாயமாக நான் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும். நான் முன்பு கூறியது போல அம்மாவின் செல்லமாக குழந்தையாகவே இருந்தேனே தவிர மற்றக் குழந்தைகளுடன் வெளியே சென்று விளையாடுபவனாக இருக்கவில்லை.

எனக்கு 18 வயதான போது இதற்கு மேலும் பொறுக்கமுடியாது என நினைத்து என் அம்மா திருநெல்வேலியில் இருந்த இந்து இளைஞர் (YMHA) மன்றத்தில் என்னை வலுக்கட்டாயமாக சேர்த்துவிட்டார். நான் வெளி உலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும் என அவர்கள் எதிர் பார்த்தார்கள். இந்து இளைஞர் மன்றத்தில்கூட ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல் அடக்கமாகத்தான் இருந்தேன்.

ஒரு நாள் சங்கத்தின் செயலாளர் என்னை நாடகம் ஒன்றில் நடிக்கக் கேட்டபொழுது பெரியவர்களுக்கு மறுப்புச் சொல்லாத குணம் காரணமாக அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. எனக்கு உண்மையிலும் விருப்பமில்லாமல்தான் அதில் நடிக்க நேர்ந்தது. என்ன நடந்ததுவென்றால் எமது அயல்வீடுகளுக்கு பால் கொண்டுவரும் ஒரு முதியவர் பாற்கலசத்தைக் கொண்டு வரும்படி நடுங்கும் குரலொன்றை எழுப்புவார். நானோ அவரது குரலை அங்கதத்துடன் மறுபடியும் எழுப்பிக்காட்டுவேன். இதனைச் சங்கச் செயலாளர் கேட்டிருக்கிறார். இதனை வைத்துக்கொண்டு அவர் எனக்கு நடிக்க வருமென்று முடிவுசெய்துவிட்டார். பாற்காரரின் குரலை அங்கதமாக எழுப்பிக் காட்டுவதை நான் ஒருபோதும் நடிகனாகும் நோக்கத்துடன் செய்ததில்லை. சுருங்கச் சொல்வதானால் எனது சிறுபிள்ளைத்தனமான பால்காரச் சுப்பையா அம்மான் போல் குரல் எழுப்பிய செயற்பாடு என்னை நிரந்தரமாகவே நாடக உலகத்துக்குள் கொண்டுவந்துவிட்டது.

**கே: நாடகத்துறைக்குள் வந்ததும் நீங்கள் இன்னும் ஆர்வத்துடன் ஈடுபாடுகொள்ளத் தொடங்கியிருப்பீர்கள் இல்லையா?**

ப: உண்மையில் இல்லை. வாழ்க்கை என்னை எப்படி எடுத்துச் சென்றதோ அதன்வழி நான் சென்றேன். வாழ்க்கை என்னை அரங்கச் செயற்பாடுகளினுடாக இழுத்துச்சென்றது என்றுதான் கூறுவேன். நான் ஒருபோதும் பெரிய இலட்சியங்களுடன் இருக்கவில்லை. வாழ்க்கையின் ஓட்டத்துடனும் திருப்புதல்க ளுடனும் இசைந்து சென்றிருக்கிறேன். அவ்வளவுதான். எனது வாழ்க்கையில் நடந்தவை எல்லாம் நடக்கவிருந்து நடந்தவைதான். எதனையும் நான் திட்டமிட்டுச் செய்யவில்லை.

**கே: கொஞ்சம் கூட நாடகத்துறை சம்பந்தப்பட்ட தூரநோக்கோடு அல்லது ஆர்வத்தோடு ஒரு செயலையும் நீங்கள் செய்யவில்லையா?**

ப: நான் அவ்வாறு நடந்துகொண்டதாக எனக்கு ஒரே ஒரு சம்பவம் மட்டுமே நினைவில் இருக்கிறது. நான் எனது க.பொ.த உயர்தரச் சோதனைகளைச் சரியாகச் செய்யவில்லை. இந்து இளைஞர் மன்றத்தில் சிலகாலம் இருந்த பின்னர் அம்மா என்னைப் பட்டதாரிப் படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பினார். அப்பொழுதும்கூட விருப்பம் இல்லாமல்தான் போனேன். அக்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நாடகங்களை ஒழுங்கு செய்வதிலும் நெறியாள்கை செய்வதிலும் இந்திய நாடகவியலாளரும் திரைப்பட நடிகருமான சோ.ராமசாமி மும்முரமாக இருந்தார். அவர் எமது சக மாணவர்குழுவில் ஒருவராகவும் இருந்தார். ஆனாலும் நான் அங்கேயும்கூட நாடக முயற்சிகளில் இணையும் ஆர்வமற்றவனாகத்தான் இருந்தேன்.

பிற்பாடு 1957 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பிவந்து செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியர் ஆனேன். அத்தோடு இந்து இளைஞர் மன்றத்திலும் மீள இணைந்துகொண்டேன். ஒருமுறை இந்து இளைஞர் மன்றத்தில் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த பரத நாட்டிய நர்த்தகி ஒருவர் நடன அளிக்கை செய்ய வரவிருந்தார். அவரது அளிக்கைக்கான மேடையைத் தயார்செய்யும் பொறுப்பு எங்கள் சிலரிடம் விடப்பட்டது. நாங்களும் நூலகத்தில் இருந்த மேசைகளை ஒன்றாக இணைத்து ஒரு மேடையைத் தயார்செய்தோம் . இந்த மேடைகள் சில ஆட்டம் கண்டிருந்தன. சில நெளிந்திருந்தன. சில உயரத்தில் சமமற்றிருந்தன. எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டி மேடையாக்கி இருந்தோம். கனதியான அந்த நடனநர்த்தகி அம் மேடையில் ஆடும்போது எங்கே மேடை உடைந்து, விழுந்து விடுமோ எனப் பயந்து படபடத்த நெஞ்சைப் பிடித்தபடி மேடையைப் பார்த்துக்கொண்டிருந்தோம். நல்லவேளை அப்படி எதுவும் நிகழவில்லை.

இதனை ஏன் சொல்கிறேன் என்றால் அந்த நடன நிகழ்வுக்கு தமிழ் நாடக உலகின் மூத்த கலைஞரான கலையரசு சொர்ணலிங்கமும் வந்திருந்து பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்ததைக் கண்டேன். என் வாழ்கையிலேயே முதன்முறையாகவும் ஒரே ஒரு முறையாகவும் அவரிடத்தில் என்னைப் பற்றிய மனப்பதிவொன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. நிகழ்ச்சி முடிந்து நாங்கள் உருவாக்கிய மேடையைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவ்விடத்தில் திரும்பச் செல்வதற்காகச் சீருந்துக்காகக் காத்திருந்தார். நானும் அவரைக் கவனியாதது போல முற்காலத்தில் தமிழர்களின் அரசனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த ராசராச சோழனின் வரலாற்றைக் குறிக்கும் ஒரு இந்திய நாடகத்தில் வரும் வரிகளை ஒத்திகை செய்து மனனம் செய்வது போல பேசியபடி வேலை செய்தேன்.

ஆனால் அவரோ அதைப்பற்றி எள்ளளவும் கவனம் செலுத்தாமல் சீருந்து வந்ததும் ஏறிச்சென்றுவிட்டார். நானோ என்னை முட்டாள் போல உணர்ந்தேன். ஆறு மாதங்களுக்குப் பிறகு 1958 இல் ஒரு நாள் யாரோ ஒருவர் திருநெல்வேலிக்கு வந்து சண்முகலிங்கம் என்பவர் யார் என்று விசாரித்து இருக்கிறார். கலையரசு சொர்ணலிங்கம் உங்களைச் சந்திக்க விரும்புகிறார் என அவர் சொன்னார். அப்பொழுதான் நான் அன்றொரு நாள் செய்ததற்குப் பலன்கிடைத்திருக்கிறது என உணர்ந்துகொண்டேன்.

**கே: அப்படியானால் அந்தச் சந்தர்ப்பத்துடன் நீங்கள் தொழில்முறையான நடிகனாக வருவதற்கான வாசல் திறந்தது எனச் சொல்லுங்கள்.**

ப: நாங்கள் எல்லோருமே அப்பொழுதும் இப்பொழுதும் தொழில்சார் நாடகக் கலைஞர்கள் இல்லை. எங்களில் எவரையுமே தொழில்முறை அரங்கக் கலைஞர்கள் எனக் கூறமுடியாது. ஈழத்து நாடக அரங்கம் நெடுங்காலமாகவே தொழிலல்லாத, தனிநபர் ஒருவர் தனது சொந்த ஈடுபாட்டின் காரணமாக ஈடுபடுகிற ஓய்வு நேரத்திற்குரிய, வருமானத்தைத் தராத ஒரு கலையாகவே இருக்கிறது. எங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேறு ஒரு தொழிலைச் செய்யவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். இன்னமும் சொல்லப்போனால் நாடக அளிக்கைகளைச் செய்வதற்கு நாங்கள்தான் பணத்தைச் செலவு செய்கிறோம். அதில் இருந்து உழைத்துக்கொள்ளமுடிவதில்லை.

சொர்ணலிங்கத்துடன் வேலைசெய்யக் கிடைத்தது முக்கியமானதொரு திருப்புமுனைதான். தேரோட்டி மகன் என்ற அவரது நாடகத்தில் நான் அர்ச்சுனனாகப் பாத்திரமேற்று நடிக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். அந்த நாடகத்தில் கர்ணன்தான் பிரதான பாத்திரம். அந்த நாடகம் மிகப் பிரபல்யம் அடைந்தது மட்டுமன்றி அதற்குப்பிறகு வந்த வருடங்களில் அந்த நாடகத்தை அவர் பத்து முறைகள் திரும்பத்திரும்ப தயாரிக்கவேண்டியும் வந்தது. சொர்ணலிங்கம் மிகவும் புத்திபூர்வமான நாடகக்காரன். எதிர்மறைக் குணங்கள் கொண்ட பாத்திரங்களை பச்சாதாபத்துக்குரியவர்களாகப் படைக்கிற வல்லமையை அவர் கொண்டிருந்தார். சேக்ஸ்பியரின் சைலொக்கில் இருந்து மகாபாரதத்தின் சகுனி வரை அவர் உருவாக்கிய பாத்திரங்கள் ஒப்பற்றவை. அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம்.

**கே: நாடக உலகைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு நடிகனாக அறியப்பட்டதைவிட நாடக எழுத்துரு ஆசிரியராகவே அதிகம் புகழடைந்திருக்கிறீர்கள். நாடக எழுத்துருவாக்கம் அல்லது நாடக எழுத்தாளர் என்பதற்குள் எவ்வாறு வந்தீர்கள்?**

ப: தேவை காரணமாகவே நான் அவ்வாறு மாறநேர்ந்தது. அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த எழுத்தாளர்கள் பலரை எழுத்துரு எழுதித்தரும்படி நாடி இருந்தேன். சிற்பி என்கிற சரவணபவனை எங்களுக்கு நாடகம் எழுதித் தரும்படி கேட்டிருந்தேன். ஆனால் அவர் எப்பொழுதும் வேலைப்பழுவோடிருந்தார். சில காலங்களுக்குப் பிறகு நான் எழுதிய சிறுவர் நாடகம் ஒன்றை அவர் பார்க்க நேர்ந்தது. அதனைத் தொடர்ந்து நாடக எழுத்துருக்களை என்னையே எழுதும்படி அவர் ஊக்குவித்தார். அதன்படி நான் நாடக எழுத்தாளன் ஆனேன். இதனைக்கூட விபத்து என்றுதானே சொல்லவேண்டும். ஆக தேவைகள் எங்களை உந்தித்தள்ளியதால் நேர்ந்தது இது.

**கே: நீங்கள் கூறுகிறபடி நிகழ்ந்த "விபத்துக்கள்" எல்லாம் உங்களின் உள்ளுறைந்திருந்த ஆர்வங்களையும் திறமைகளையும் வெளிக்கொண்டு வருபவைகளாக இன்றுவரையும் அமைந்துவிட்டிருப்பதை நீங்கள் உணரவில்லையா? யாழ்ப்பாணத்தில் இன்றைக்கு உங்களுடைய பல நாடகங்கள் போற்றப்படுபவையாக உள்ளனவே?**

ப: திரும்பவும் இல்லை என்றுதான் சொல்வேன். எழுதவேண்டிய தேவை இருந்ததால் எழுதத் தொடங்கினேன். ஆனால் அதையே தொடர்ந்து செய்ய வேண்டி இருந்தது. வாழ்க்கை அதைத்தான் என்னிடம் எதிர்பார்த்தது. மக்கள் என்னுடைய நாடகங்களை இரசித்துப் பார்ப்பதாகக் கூறுகிறார்கள். அது சந்தோசம் தருவது. அதுவே போதுமானது. ஆனால் நான் உன்னதமான செவ்வியல் நாடகக் காவியத்தை எழுதிய ஆசிரியன் இல்லை. பாடசாலைப் புத்தகங்களில் எனது நாடகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் அவற்றின் உள்ளடக்கம் அந்தந்தக் காலப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை. அவற்றின் பாதிப்பினால் உருவானவை. எனவே அவை வரலாற்றில் இடம்பெறப்போவதில்லை. காலம் கடந்து வாழப்போவதில்லை. நான் அவற்றை எழுதியபோது அவை காலம் கடந்து வாழவேண்டும் என்ற நோக்கத்தோடும் எழுதவில்லை.

**கே: உங்களுடைய எந்த எழுத்துருவுக்காக நீங்கள் அதிகம் அறியப்படுகிறீர்கள்?**

ப: எனது சிறுவர்களுக்கான நாடக எழுத்துருக்களுக்காகவே நான் அதிகம் அறியப்படுகிறேன். ஒரு ஆசிரியராக எனது பிரதான பணி, நான் ஓய்வு பெறும் வரைக்கும் சிறுவர்களுடன் வேலை செய்வதாகவே இருந்திருக்கிறது. எனவே எனது அனேகமான எழுத்துக்கள் அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டன. சிறுவர்களைக் கவரும் விதத்தில் ஒரு நவீன நாடக வடிவத்தை மீளுருவாக்கம் செய்தற்காகவே நான் அதிகம் பாராட்டப்படுகிறேன்.

**கே: உங்களுடைய பல நாடகங்கள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதற்காக நீங்கள் அதிகம் பயணங்கள் செய்திருப்பீர்கள். கௌரவிக்கப்பட்டும் இருப்பீர்கள் அல்லவா?**

ப: நான் பயணங்கள் அதிகம் செய்வதில்லை. என்னுடைய எழுத்துருக்களை நாடகமாக நெறியாள்கை செய்யவிரும்பும் நெறியாளர்களிடமே அதற்கான முழுப்பொறுப்பையும் விட்டுவிடுகிறேன். கவனத்துக்குள்ளாவதும் பாராட்டுகளுக்குள்ளாவதும் என்னை எரிச்சலூட்டுகின்றன. எனவே இவற்றைக் கூடுமானவரை தவிர்த்துவிடுகிறேன். தமிழ் மக்களிடம், விழாக்கள் எடுத்துப் பட்டுப் பீதாம்பரங்கள் அணிவித்து ஒருவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் பழக்கம் இருக்கிறது. பணத்தை விரையமாக்கும் அபத்தமான பழக்கம் இது.

மக்களுடைய உணர்வுகளையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்கொண்டு வரும் படைப்புக்களை என்னால் எழுதக்கூடியதாக இருப்பதற்கான காரணம், நான் அவயமான சிந்தனைகளோடு புறத்தில் நின்று மக்களை அவதானிப்பவனாக சமூகத்தை அவதானிப்பவனாக இருப்பதுதான். மக்களின் உணர்வலைகளுடன் பரிவதிர்கிற பாத்திரங்களைத்தான் என் படைப்புகளில் கொண்டுவருகிறேன். ஒரு கூட்டத்தின் மையப்புள்ளியாக இருப்பதை விடவும் ஒரு மூலையில் இருந்துகொண்டு அனைவரையும் அவதானிக்கும் சந்தர்ப்பம் தரப்படுவதையே நான் அதிகம் விரும்புகிறேன்.

**கே: வெளிநாடுகளில் மேடையேற்றப்பட்ட உங்களுடைய நாடகங்களில் எது மிகப்பிரபல்யமானது என நினைக்கிறீர்கள்.**

ப: "எந்தையும் தாயும்" என நினைக்கிறேன்.

தமது சகல பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தமது முதுமைக்காலத்தில் இங்கே தனித்திருக்கும் பெற்றோரைப் பற்றியது அந்நாடகம். இதனை 1991 ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் எனது மகனின் வேண்டுகோளுக்கிணங்கியே எழுதினேன். கனடாத் தமிழர்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் அக்காலப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு நாடகத்தை எழுதித்தரும்படி அவர் கேட்டிருந்தார். அவரின் மனதில் இருந்த எண்ணத்தை இந்த நாடகம் பூர்த்திசெய்தா என்று தெரியாது. ஆனால் அவருக்குக் கிடைத்தது அந்த நாடகம் தான்.

இந்த நாடகம் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல நாடுகளிலும் மேடையேற்றப்பட்டது. மட்டக்களப்பு மற்றும் கொழும்பிலும் இந் நாடகம் மேடையேற்றப்பட்டது.

**கே: புலம்பெயர்ந்தவர்கள் அந்த நாடகத்திற்கு எவ்விதமான எதிர்வினையை ஆற்றினார்கள்?**

ப: அந்த நாடகம் நிச்சயமாக அவர்களின் உணர்வலையைத் தாக்கியிருந்தது. அந்த உணர்வு மகிழ்ச்சியானதாக இல்லையென்றபோதும்..... இங்கிலாந்தில் அந்த நாடகத்தை நெறியாள்கை செய்து அளித்த எனது நண்பனும் மூத்த நாடக ஆர்வலருமான தார்சீசியஸ் என்னுடன் தொடர்புகொண்டு மக்கள் அந்த நாடகத்தை அசையாமல் இருந்து கண்களில் நீர் வழியப் பார்த்ததாகக் கூறினார்.

அந்த நாடகத்தில் ஓரிடத்தில் உணர்ச்சிபூர்வமான பகுதி ஒன்றினிடையே நகைச்சுவையான சில வரிகளும் வரும். அந்த நகைச்சுவைக்கு வந்திருந்த பார்வையாளர்களில் ஒருவர் மட்டுமே சிரித்ததாகவும் அவரும்கூட ஏனையவர்களின் கவனத்தை தனது சிரிப்புக் குலைத்துவிட்டதை அவர்களின் பார்வையில் இருந்து உணர்ந்துகொண்டதாகவும் கூறினார். அந்த நாடகம் வெற்றியடைந்தது என்பது எனது உறுதி.



**கே: நிறைய அனுபவங்களைப் பெற்றவர் என்ற வகையிலும் அவற்றை உங்களுடைய நாடகங்களில் அதிகமாக வெளிப்படுத்தியவர் என்ற வகையிலும் இளைய தமிழ்ச் சமூகத்திற்கு என்ன புத்திமதியைச் சொல்ல விரும்புகிறீர்கள்.**

ப: எங்களில் பலர் நவீன உலகமயமாதலுக்கும் பழமையான எங்கள் கலாசாரத்துக்கும் இடையில் சிக்கியிருக்கிறோம். வேகமாக மாறிவரும் உலகம் விடுக்கும் சவால்களை எதிர்கொள்ளுதலும் அதே வேளை குறிப்பிடத்தக்க எங்கள் கலாசாரத்தை பேணுதலும் ஆகிய அசௌகரியத்தைச் சந்திக்கிறோம். இதனை இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

**கே: நவீனத்துக்கும் மரபுக்கும் இடையில் எங்கே எல்லைக் கோட்டைக் கீறுவது?**

ப: கலாசாரம் என்பது மக்களால் அவர்கள் வாழும் காலத்தில் நடைமுறையில் பின்பற்றப்படுவது. நாங்கள் எதனை விரும்பவேண்டும் அல்லது எதனைச் செய்யவேண்டும் என்பதைப் பழமைவாதிகள் அல்லது மரபுவாதிகள் கூறமுடியாது. எமது முன்னோர்கள் கைக்கொண்டவைகள் என அவர்கள் கற்பனை செய்து கொள்பவைகளை எல்லாம் நாங்கள் இப்பொழுது விரும்ப வேண்டும் என்று அவர்கள் சொன்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

கடந்த பல வருடங்களாக ஒரு நாடக ஆர்வலனாக இச்சமூகத்தை அவதானித்தவன் என்ற வகையில் ஒன்றைச் சொல்ல முடியும். மீளுருவாக்க எழுத்தாளர்கள் நாடக எழுத்தாளர்கள் இன்னும் பல கலை இலக்கியவாதிகள் யாவரும் சமூகம் கடுமையான நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் சந்தித்த போதுதான் எழுச்சிகொண்டு படைப்புகளைப் படைத்திருக்கிறார்கள். அவ்வகையில்மிகமோசமானசமூகநிலைமைகளின்கீழ்தான் அற்புதமான இலக்கியங்கள் சமூக விழுமியங்களையும் பெறுமானங்களையும் எழுச்சி அடையச்செய்யப் படைக்கப்பட்டன. காலங்கள் பல கடந்த பின்பு கடந்தகாலத்தில் சமூகத்தில் என்ன நிகழ்ந்தது என்பதைத் தெரியாத அல்லது புரியாத பழமைவாதிகள் எமது முன்னோர்கள் அற்புதமானவர்கள்; அவர்களிடம் அற்புதமான விழுமியங்கள் இருந்தன எனச் சொல்லுவதை என்னவென்பது.

உதாரணத்துக்கு திருவள்ளுவருடைய குறளையோ ஔவையாருடைய அற்புதமான சந்தம் நிறைந்த வெண்பாக்களையோ அல்லது செய்யுளையோ வாசித்துவிட்டு அவர்கள் போதித்த அறநெறிக் கருத்துகளை வாசித்துவிட்டு நம் முன்னோர்கள் அற்புதமான பெறுமானங்களைக் கொண்டிருந்தனர் என்று சொல்ல மரபுவாதிகள் முனையக்கூடும்.

திருவள்ளுவரோ ஔவையாரோ தரும் அறிவூட்டல்கள் பொதுவான உணர்வு நெறிமுறைகளைச் சார்ந்தவை. மக்களுக்கு களவெடுக்க வேண்டாம், மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்க வேண்டாம் என்று அறநெறிப் போதனைகளைச் செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் இருந்தனர் என்றால் அச்சமூகத்தை நினைத்துப் பாருங்கள். அவர்கள் சட்டமும் ஒழுங்கும் நிலைகுலைந்திருந்த சமூகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள் என்றுதானே நான் எடுத்துக்கொள்ளவேண்டும். அதேவேளை மற்றவர்களின் கலாச்சாரத்தைப் பின்பற்றுவ தற்காக எங்களது கலாச்சாரத்தைக் கைவிட்டுவிடவேண்டும் என்றும் சொல்லமாட்டேன். ஆனால் "ஒளிமயமான" பழம் பெருமைகளின் பின்னால் தொங்கிக்கொள்ளவும் பரிந்துரைக்கமாட்டேன். கலாசாரம் என்பது கடிகாரம் போன்றது. அதன் முட்கள் காலத்துடன் நகர்ந்துகொண்டிருக்கும் அந்த நகர்வை யாராலும் எதனாலும் தடுத்து நிறுத்தமுடியாது.

மரபுவாதிகள் செய்வது என்னவென்றால் கடிகாரத்தின் நிமிட முள்ளை அவசரப்பட்டுப் பிடித்து அது அசைவது தெரிவதால் அதை அசையவிடாமல் செய்துகொண்டு காலம் அசையாமல் நிற்கிறது என்று நினைத்துக்கொள்கிறார்கள். அதேவேளை கடிகாரத்தின் மணித்தியால முள்ளு அசைந்துகொண்டுதான் இருக்கும். ஆனால் அதனை அவர்களால் பார்க்கவோ உணரவோ முடிவதில்லை. எனவே அதைத் தடுக்க அவர்கள் முனைவதில்லை. ஆக நீங்கள் நிமிட முள்ளைத் தடுத்துக்கொண்டு காலம் போகவில்லை என நினைத்து இறுகிவிடமுடியாது. மாற்றம் தவிர்க்கமுடியாதது. கால ஓட்டத்துடன் இணைந்துதான் செல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தியப் பிரதமர்

# மோடிக்கு..!

உங்கடை நண்பராக இருந்து தமிழர் பிரச்சினையைத் தன்ரை தோளிலை சுமந்த மாவை அண்ணையும் என்னை விடு எண்ட மாதிரிக் கடவுளிட்டைப் போய்ச்சேர்ந்திட்டார். அவருக்கு அஞ்சலி. பாவம் பிழைக்கத் தெரியாத மனுசன் அவர். அவரும் தீர்வு விசயத்திலை உங்களைத்தான் நம்பி இருந்தவர். இஞ்சையும் புதுசா வந்த அரசாங்கத்துக்கும் என்ன கஷ்டகாலமோ தெரியாது. அவையும் பழைய பிரச்சினையைத் தோண்டி அதுக்குரிய ஆட்களைச் சட்டத்துக்கு முன்னாலைவிட்டு ஒருக்கால் தோய்ச்செடுக்கிற வேலையிலை இருக்கேக்கை... தொடர்ந்து அவைக்கும் பல சோதனை. அதைவிடவும் புதுசு புதுசாப் பிரச்சினைகள் உருவாகிக்கொண்டு இருக்கிறது எனக்குச் சரியான மனக்கவலையா இருக்கு.

அரசியலுக்கை பிரச்சினை, ஆஸ்பத்திரிக்கை பிரச்சினை, யூனிவர்சிட்டீக்கை பிரச்சினை இப்ப கடைசியா இந்திய மீன்பிடிகாரரின்ர பிரச்சினையும் சேர்ந்து ஒரே களேபரமாக் கிடக்கு. பொறுப்புள்ள நீங்கள் இப்பிடிப் பொறுப்பில்லாமல் நடக்கப்பிடாது எண்டது என்ரை அபிப்பிராயம்.

மேலை, முதல் சொன்னதில கடைசியாகச் சொன்னது வெளிநாட்டுப் பிரச்சினை. இந்தியா இந்த விசயத்திலை கண்ணியமாகவும், பெருந்தன்மையோடையும் நடந்துகொள்ளவேணும் எண்டது எங்கடை எதிர்பார்ப்பு. வல்லமை இருக்குது எண்டதுக்காக உலுத்தத்தன்மையோடை நடக்கிறது அவ்வளவு அழகாக இருக்காது எண்டு நான் நினைக்கிறன். இந்தியாதான் அறத்தின்ரை ஆரம்ப நிலம் எண்டு போற்றப்படுகுது . அது எல்லாருக்கும் தெரியும். அதனாலைதான் ஔவையார் அறத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்.




உறவு உறவெண்டாலும் பறியிக்கை கைபோட விடப்படாது எண்டது அப்பு சொல்லித் தந்த தாரக மந்திரம். அதுவும் உங்கட நாட்டு மீன்பிடிகாரர் பெரிய பெரிய றோலர்களைக் காசு குடுத்து வாங்கின கடனைக் கட்டுறதுக்காக எங்கடை வளத்தைக் கொள்ளை அடிக்கிறது நல்லது இல்லை. றோலர்களைக் கொண்டுவந்து மீனை அள்ளிக்கொண்டு போறது மட்டும் இல்லை, மீன்வளத்தை அழிக்கிற மாதிரி தமிழ் நாட்டு மீன்பிடியாட்கள் நடக்கிறது மனசை நோகவைக்குது.

இப்படியான செய்கைகளிலை அவை ஈடுபட்டாலும் சண்டைக்காலத்திலை அவையின்ரை செயற்பாடுகளை மறக்கேலாது. அவை சரியான உதவியளைச் செய்தவை. அதுக்காக அவை செய்யிறது எல்லாத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் எண்டதில்லையே. இப்பிடி நான் நினைக்கிறதும் ஒருவகையிலை சுயநலந்தான். அப்ப அப்பிடியானதை ஆதரிச்சம், விடுதலை எண்ட ஒரு பொதுவிசயத்துக்காக. இப்ப கதைக்கிற விசயம் எங்கடை ஆக்களின்ரை வாழ்வாதாரம் எண்ட ஒரு பொது நன்மைக்காக. வாழ்வாதாரம் மட்டுமில்லை எங்கடை கடலைப் பாதுகாக்கவேண்டிய தேவைப்பாடும் எங்களுக்கு இருக்கு.

இந்திய மீன்பிடிகாரரைப் பொறுத்தவரை கோடிக்கணக்கான காசைக் குடுத்து பெரிய றோலர்களை வேண்டி இந்தியாவின்ரை கிழக்குப் பக்கத்து மீன்வளத்தையும், மேற்குப் பகுதியிலை உள்ள வளத்தையும் வறுகித் திண்டிட்டு இப்ப எங்கடை வளத்தைத் திருடித் தின்ன வருகினம் எண்டு எங்கடை ஆக்கள் கதைக்கினம்.

இந்திய அரசாங்கம் ஒண்டை விளங்கிக்கொள்ளவேணும். எந்தச் சூழ்நிலையிலும், பொதுவாக இலங்கை மக்களை, குறிப்பாகத் தமிழ் மக்களை, அதுவும் வடபகுதி மீனவர்களைப் பகைக்கக் கூடாது எண்டதை ஒரு தீர்மானமாகக் கொள்ளவேணும். இலங்கையோடை ஏற்படுகிற எந்த முரண்பாடும் இந்தியாவின்ரை இறைமையைப் பாதிக்கும் எண்டதை விளங்கிக்கொள்ளவேணும். இரண்டு பேருக்கும் இடையிலை ஏற்படுகிற விரிசலை இன்னும் பெரிசாக்கக் கனபேர் காத்திருக்கினம். அதுக்கை மூக்கை நுழைக்கக் கனபேர் கனவு கண்டுகொண்டிருக்கினம். ஆனபடியாலை வல்லரசு எண்டு சொல்லிக்கொள்ளுற நல்லரசான இந்தியா தன்ரை புத்திக் கூர்மையாலை நிலைமையை விளங்கிக்கொண்டு இராஜதந்திர நகர்வுகளை நகர்த்தவேணும்.



யுத்த காலம் தொட்டு இந்தியா தமிழர்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வந்ததாகத்தான் எங்கடை ஆக்கள் நம்புகினம். அதுக்காகத்தான் யாழ்ப்பாணத்திலை உதவித் தூதரகத்தையும் கொண்டு வந்தனீங்கள் எண்டதும் பலரது எண்ணம். அது மட்டுமில்லை கலாசார நிலையம் ஒண்டையும் கட்டினனீங்கள். அப்ப யாழ்ப்பாணக் கலாசார நிலையம் எண்டு பேர் வைச்சு எங்கடை ஆக்களைச் சந்தோஷப்படுத்தினியள். இப்ப கிட்டடியிலை ஜனாதிபதி அநுர இந்தியாவுக்கு வந்துபோனார். பிறகு திருவள்ளுவர் கலாசார நிலையம் எண்டு பேர் மாத்தி எங்கடை எல்லாற்றையும் நெஞ்சிலை குத்தினியள். கேட்டதுக்கு எனக்குத் தெரியாது, உனக்குத் தெரியாது எண்டு இரட்டொட்டி விளையாட்டு விளையாடினியள். பிறகு இஞ்சை வலுத்த எதிர்ப்பாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம் எண்டு பேரை மாத்தி இப்ப பெரிய போர்ட் ஒண்டை மாட்டி இருக்கிறியள். உதெல்லாம் சின்னப்பிள்ளையள் மண் விளையாடுற விளையாட்டு மாதிரி இருக்கு.

இண்டைக்கு நேற்றல்ல உங்கடை அரசாங்கம் எப்பவும் இதே மாதிரியான பிழையழைத்தான் விட்டுக்கொண்டுவருகிது. ஒரு இராஜதந்திர நகர்வாகத்தான் மீனவரின்ர பிரச்சினையைக் கையிலெடுக்கிற மாதிரி இருக்கு. உப்பிடியே மாறிமாறிச் சுட்டுக்கொண்டு இருந்தால் தீர்வு என்ன? உங்கடை அரசியல் செய்யத் தயவுசெய்து எங்களைப் பாவியாதையுங்கோ. எங்களைப் பொறுத்தவரை ஒரு நல்ல தீர்வுவேணும். அவ்வளவுதான்.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து

# தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஏற்படுத்தும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்கள் ஏற்படாத ஒரு வெற்றிடத்தில், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பால்அதாவது யாப்பில் ஒரு மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசுக் கட்டமைப்பால்தமிழ் மக்களின் ஒப்புதலின்றி தமிழ்ப் பகுதிகளில் கட்டப்படும் பெரும்பாலான பௌத்த வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிப்பு உள்நோக்கமுடையவைகளே. எனவே ஓர் ஆக்கிரமிப்பை எவ்வாறு கையாளவேண்டும் என்றுதான் இங்கு சிந்திக்கலாம். அது ஓர் அரசியல் தீர்மானம்.

இந்த விடயத்தில் தொடர்ச்சியாக விழிப்பை ஏற்படுத்தி வந்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். ஆனால் அந்த விழிப்பு ஒரு கவன ஈர்ப்பாகத்தான் இருந்துவருகிறது. ஒவ்வொரு முழு நிலா நாளன்றும் விகாரைக்குப் போகும் வழியில் நின்று அந்தக் கட்சியின் விரல் விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. அதை ஒரு மக்கள் மயப்பட்ட போராட்டமாக மாற்ற முன்னணியால் முடியவில்லை. குறைந்தபட்சம் ஏனைய கட்சிகளைக்கூட அதில் இணைத்துக்கொள்ள முடியவில்லை.

அண்மையில் குமார் பொன்னம்பலம் நினைவுப் பேருரையை ஒழுங்குபடுத்திய பொழுது அந்தக் கட்சி அந்த விடயத்தில் கவனம் செலுத்தியது. "மக்கள் மயப்படுத்தப்பட்ட வேண்டிய அரசியல் "என்பதே நினைவுப் பேருரையின் தலைப்பு. ஆனால் நினைவுப் பேருரை ஆற்றிய பேராசிரியர் அந்தத் தலைப்பின் கீழ் உரையாற்றவில்லை. தமிழ் மக்களை தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து எப்படி நிறுவனமயப்படுத்துவது என்ற விடயத்தில் தமிழ்க்கட்சிகளிடம் பொருத்தமான தரிசனங்கள் எவையும் கிடையாது. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், தமிழ்த் தேசியவாத அரசியலை எப்படி நிறுவனமயப்படுத்துவது என்று தமிழ்க் கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஆக்கிரமிப்பை முன்னெடுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதமானது அரசுடைய தரப்பு. அதனிடம் அரச வளங்கள் உள்ளன; திணைக்களங்கள் உள்ளன. கடந்த 15 ஆண்டுகளாக திணைக்களங்கள்தான் அரசின் உபகரணங்களாக ஆக்கிரமிப்பை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அதற்கு எதிராகப் போராடும் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனை கிடையாது. அதாவது ஆக்கிரமிப்பு நிறுவனமயப்பட்டுள்ளது. அதற்கு எதிரான போராட்டம் உதிரியாக, சிறு திரளாக, கவனயீர்ப்பாகச் சுருங்கிக்கொண்டே போகிறது. முள்ளுக் கம்பிகளால் பாதுகாக்கப்படும் தையிட்டி விகாரை வான் நோக்கி எழுகிறது.

# கைலாய...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் உருவாக்கிய அழிவுகளைச் சரிசெய்வதெப்படி என்று புரியவில்லை அவளுக்கு. எழும்பி கடலை நோக்கி மெதுவாக நடக்கத்தொடங்கினாள். பின் மெல்லத் திரும்பி கரையை நோக்கி நடந்தாள்.

சிலபொழுது வேகமாகவும் சிலபொழுது மெதுவாகவும் அவள் நடக்கையிலே அவள் கூந்தல் நுனியிலும் சேலை நுனியிலும் சிக்கிக்கொண்டிருந்த அழிவின் சிதிலங்கள் அவளைச் சங்கடப்படுத்தத் தொடங்கியிருந்தன. ஓ என்ற பிரபஞ்ச உயிரினங்களின் அழுகைக்கு மத்தியில் அவள் அப்படியே நின்று கொண்டிருந்தாள். எத்தனையோ புயல்களின் நகர்வுகளுக்கான பாதைகளையெல்லாம் துல்லியமாக வரைந்துவிட்டுப் போகின்ற அறிஞர்களால் யாகினிப்புயலின் நகர்வுப் பாதையினை மட்டும் வரையறுக்கமுடியவில்லை. அவர்கள் குழம்பித்தான் போயிருப்பார்கள். அவர்களின் நிலை இவ்வாறிருக்க கைலாய மலையிலே சிவனின் நிலையோ பெரும்பாடாகவிருந்தது. எலிக்குஞ்சினை சமாதானப்படுத்தி அதன் கையினாலே மூன்றாவது மலரையும் யாகினிமேல் தூவச் செய்வதற்குள் அவருக்குப் போதுமென்றாகிவிட்டது. மூன்றாவது மலரினை எலிக்குஞ்சு தூவியபோது அது மாலையாக அல்ல மலர்ச்செண்டாகச் சென்று யாகினி கைகளில் விழுந்தது. அத்தனை அழகாயிருந்தது அந்த மலர்ச்செண்டு. என்ன செய்வதென யோசித்தாள் யாகினி. அவிழ்ந்த கூந்தலை அள்ளிச் செருகியவாறே நேரடியாகக் கைலாயமலைக்குச் சென்றவள் மலர்ச்செண்டுடன் தேவியின் பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கிடந்தாள். கீழே வீழ்ந்து கிடந்தவளை அள்ளியெடுத்து உச்சி மோர்ந்தாள் தேவி. தன் கூந்தலை அள்ளி முடிந்தவாறே அதில் யாகினி கொடுத்த மலர்ச்செண்டில் இருந்த சில பூக்களையும் செருகிக்கொண்டாள். சிவன், யாகினியின் தலையைத் தடவியவாறே "பிறப்புகளும் இறப்புகளும் இயல்பானவைதான் மகளே, ஆனால் கோபம் இயற்கைக்கு முரணானதல்லவா" எனக் கூறிக்கொண்டே புன்னகைத்தார். பூமியின் அதிகாலை வானிலைத் தகவல்கள் பின்வருமாறு இருந்தன. வங்கக்கடலில் உருவான அதிஉயர் தாழமுக்கத்தின் ஆபத்து நிலை முற்றாக விலகியது. மக்கள் பயப்படத்தேவையில்லை. வந்த வேலை முடிந்த திருப்தியில் நாரதரும் கைலாயமலையில் இருந்து புறப்பட்டுக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பவோ முடிந்த காரியம்!



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத
இயற்கை வைத்தியர், சுவிஸ்)



## புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை

என்னுடைய கதையில் சிறிய ஓர் இடைவேளை !

பழைய காலத்தில் மக்கள் புங்குடுதீவிலிருந்து வேலணை வழியாக யாழ். வருவதற்குப் பட்ட அவலங்களைக் கண்ட அம்பலவாணர் (மக்களால் பெரிய வாணர் என்று அன்புடன் அழைக்கப்பட்ட பெரியார்) தன் தம்பியாரான சின்னவாணருடன் இணைந்து நாடெங்கும் அந்த அவலங்களை அறியச்செய்தார். அதுமட்டுமன்றி அந்தக்கால அரசியல்த்தலைவர்களுடன் பல்வேறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு 1953 ஆம் ஆண்டில் முழுக்க முழுக்க புங்குடுதீவு மக்களின் உதவியோடு இந்தப்பாலம் அமைக்கப்பட காரணகர்த்தாவாக இருந்தார். பழைய காலங்களில் மக்கள் வேலணை செல்வதற்கு சிறிய ஓடங்களிலும் முழங்காலளவு தண்ணீரில் நடந்தும் தான் கடலைக் கடந்தார்களாம்.

மக்கள் பட்ட அவலங்களை வித்துவான் சி. ஆறுமுகம் பின்வரும் கவிதையிலே தெரிவிக்கின்றார். இதைவிடச் சிறப்பாக யாரால் அந்தத்துன்பங்களை எடுத்துரைத்திருக்கமுடியும்?

தோணிகளிற் காலைவைத்து ஏறின்
கொஞ்சத் தூரந்தான் மிதக்குமவை!
பொறுக்கும் சேற்றில்
ஆணென்ன பெண்ணென்ன!
குழந்தையென்ன
அகலாத நோய்பிடித்த கிழந்தானென்ன
நாணின்றி ஆடைகளைத் தூக்கி நடுக்கடலில்
புதை சேற்றில் நடந்த காட்சி தோணுதையா
மனப்படத்தில் துயரம் யாவும்
தொலைந்திடுமோ வாணர்
வந்து தோன்றாவிட்டால்?

நிறைமாதக் கர்ப்பிணியும்
வயிறு நொந்தே நெடுநேரம் தோணியிலே நின்று கொண்டு
இறைவா எம் விதியேதான் இதுவென்று
ஏங்கிடுவாள்! அழுதிடுவாள்!
என்னே வாழ்வு! மறையாதோ இக்கொடுமை
என்றெண்ணி மகவுதனைப்
பெற்றிடுவாள் தோணிக்குள்ளும்
கறைபடிந்த வாழ்விதுவும்
கலைந்ததம்மா கண்ணியஞ்சார்
வாணர் வந்து பிறந்ததாலே

இந்தக் கவிதையையும் தகவல்களையும் கலாநிதி. கார்த்திகேசு குகபாலனால் எழுதப்பட்ட "தீவகம் வளமும் வாழ்வும்" என்ற நூலில் இருந்து சு. கோகிலதாசனால் தொகுக்கப்பட்ட கட்டுரையிலிருந்து அறிந்துகொண்டேன். தங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். என்னுடைய கதைக்கு வர முதல் என் அருமை நண்பர் புங்குடுதீவைச் சேர்ந்த கருணாமூர்த்தி என்னுடைய கதையை வாசித்த பின்பு அதைப் பாராட்டிவிட்டு புங்குடுதீவு பற்றிய பல அரிய தகவல்களைத் தந்தார். அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நான் உண்மையிலேயே என்னுடைய அனுபவக்கதையைத்தான் எழுதத்தொடங்கினேன். ஆனால் அதைவிட முக்கியமான பல விடயங்கள் பற்றி நான் பல்வேறு வழிகளிலும் அறிந்துகொண்டமையால் அவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

இப்பொழுது திரும்ப என்கதைக்கு வருகின்றேன். அம்பலவாணர் தாம்போதியில், தாம்போதி பற்றியோ அன்றி மக்கள் அந்தக்காலத்தில் பட்ட அவலங்கள் பற்றிய அறிவோ ஏதுமின்றி என் கண்ணுக்கினிய, மனதுக்கினிய, உடலுக்கினிய கடலையும் கடற்காற்றையும் பசி, தாகத்தை மறந்து சுகித்தவண்ணம் கிட்டத்தட்ட அரைவாசித்தூரம் வந்திருப்பேன்.

திடீரென்று..........,"ஆம் சரியாகத்தான் ஊகித்திருக்கிறீர்கள் !

திடீரென்று மோட்டார் சைக்கிள் தானாகவே வேகத்தைக் குறைத்துக்கொண்டு நடுக்கடலில் தானாகவே நின்றுவிட்டது. எது நடக்கக்கூடாது என்று நினைக்கின்றோமோ அது நடந்தே விடுகின்றதே வாழ்க்கையில். அப்பொழுது கண்ணகை அம்மா மீது கோபம்தான் வந்தது. முதலாவது இடத்திலாவது பரவாயில்லை மனிதர்கள் இருந்தார்கள். உதவிசெய்யத் தயாராக நல் உள்ளங்கள் இருந்தன. இப்பொழுது நடுக்கடலில் என்னைக் கொண்டுவந்து தனியாக விட்டுவிட்டாயே அம்மா!

"ஒரு மனிசனை இப்படியெல்லாமா சோதிப்பாய்.? "என்று வடிவேலண்ணர் எங்கோ சொன்னது போல கேட்டேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருபுறமும் யாருமில்லை. எந்த ஒரு வாகனமும்இல்லை. தூரத்தில் வானத்தில் இரண்டு, மூன்று பறவைகள் பறந்துகொண்டிருந்தன.

தொலைபேசி சார்ஜ் இல்லாது உறக்க நிலைக்குப் போய்விட்டது. வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. பசி, அதை விடத் தாகம்! அங்கு குடித்த தண்ணீர் ஆவியாகிப் போய்விட்டது. இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால் இன்னும் ஒரு தண்ணீர்ப்போத்தலை எடுத்து வந்திருப்பேனே! "சென்றவர்" ஒன்றும் குறை எண்ணியிருக்கமாட்டாரே!

என்னைச் சுமந்து வந்த பைக்கை நீ எனக்கே சுமையாகிப் போனாயே என்று சொல்லிக் கொண்டு பைக்கைத் தள்ளிக்கொண்டே நடந்தேன். ஒரு பஸ்வண்டி எதிர்த்திசையிலிருந்து வந்துகொண்டிருந்ததது. பஸ்வண்டி கடந்துபோகும்போது உள்ளே இருந்த சிலர் என்னை பரிதாபமாகப் பார்த்திருக்கக் கூடும். ஆனால் நான் அவர்களைத் திரும்பிப்பார்க்கவில்லை .

வேறு எந்த வாகனமும் வரவில்லை. இப்ப ஹெல்மெட்டைக்கழற்றவா அல்லது போட்டபடியே நடக்கவா? போட்டபடியே நடந்தால் புழுக்கமாக இருக்கும். கழற்றிவிட்டு நடந்தால் மொட்டந்தலையிலே சுடும். சுட்டாலும் பரவாயில்லை என்று கழற்றிவிட்டே நடந்து கொண்டிருந்தேன். நம்புவீர்களா? ஒரு கால் மணி நேரம் வேறு எந்த வாகனமும் வரவேயில்லை!

அண்மையில் "ஆடு ஜீவிதம்" என்ற ஒரு மலையாளப்படம் பார்த்தேன். நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குப் போகத் துடிக்கும் இளைஞர்கள் பார்க்கவேண்டிய படம். அதில் கொடுமையான அரபி நாட்டு முதலாளியிடமிருந்து தப்பி இரண்டு இந்திய இளைஞர்கள் பாலைவனத்தில் தண்ணீர் இல்லாது தவித்த காட்சியும் வந்துபோனது. அதில் இறுதியில் ஒரு இளைஞர் தாக மிகுதியால் இறந்தே போனார். இது பாலைவனம் இல்லை. கொஞ்சத்தூரத்தில் சோலைவனம்.

இருபுறமும் தண்ணீர். தண்ணீருக்கு நடுவிலே நான். தண்ணீர்த் தாகம், ஆனால் குடிப்பதற்கு மட்டும் தண்ணீர் இல்லை.

என்ன ஒரு கிலோமீற்றர் வரை நடந்திருப்பேன். முன்னே பார்த்து நடக்கவேண்டும். பின்னேயும் வாகனம் ஏதும் வருகிறதா என்று பார்க்கவேண்டும். ஒருமுறை திரும்பிப்பார்க்கும்போது தூரத்தில் ஒரு மோட்டார்சைக்கிள் வந்துகொண்டிருந்தது. கிட்டவரும்போது பார்த்தேன். மறித்தேன், நிற்கவில்லை. ஓர் இளைஞர் என்னைப் பார்த்தபடியே எந்த உணர்ச்சியுமின்றிக் கடந்து போய்க்கொண்டிருந்தார். அவருக்கு என்ன சோலியோ அல்லது ஏன் வீண் சோலி என்று நினைத்தாரோ?

இரண்டு நிமிடத்தில் மீண்டும் பின்னே பைக் ஒன்று வரும் சத்தம் கேட்டது. திரும்பவும் ஒருவர் பைக்கில் வந்துகொண்டிருந்தார். அவரையும் நம்பிக்கையோடு கைகாட்டி மறித்தேன். ஒரு இருபது மீற்றரில் வரும்போதே அவர் நெற்றியில் திரிபுண்டரமாகப் பூசப்பட்டிருந்த திருநீறும் அழகாக வைக்கப்பட்டிருந்த சந்தன, குங்குமப்பொட்டும் ஹெல்மெட்டுக்கூடாகத் தெரிந்தன.

அவர் என்னைப்பார்த்துவிட்டு நிறுத்தினார். ஒரு பத்து மீற்றர் தள்ளிப்போய் வண்டி நின்றது.

என்ன நடந்தது . பெற்றோல் இல்லையோ? என அந்த நபர் கேட்டார். முதலிலும் இதைத் தான் கேட்டார்கள். இங்கு எரிபொருள் இல்லாது நிற்கும் பைக்குகள் அதிகம் போலும்.




(பயணம் தொடரும்)



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

17

1958 ஆம் ஆண்டு இலங்கையில் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்காவால் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு தென்னிலங்கையில் வசித்துவந்த தமிழர்களை துவம்சம் செய்த பின்னர் யாழ்ப்பாணம் நோக்கிக் காடையர் குழு புறப்பட்டது. முதலில் வவுனியாவை நிர்மூலமாக்குவதே சிங்களப் பேரினவாதிகளின் திட்டம். பிரதமர் பண்டாரநாயக்க வவுனியா இராணுவமுகாம் பொறுப்பதிகாரியான இராமநாதனை 2 மணிக்குப் பின்னர் வவுனியாவில் நிற்கக்கூடாது என உத்தரவிட்டார். ஓமந்தைக்கு இடமாற்றம் செய்தார்.

வவுனியா பன்சாலையிலிருந்து ஆயுதங்களுடன் காடையர்கள் புறப்படுவதாக சுந்தரலிங்கத்திற்குத் தகவல் கிடைத்தது. பொலிஸ் அதிகாரி சூசைப்பிள்ளை, சுந்தரலிங்கத்திடம் சென்று என்ன செய்வது என வினவினார். சுந்தரலிங்கம் வவுனியா எல்லைக்கு வெளியே எதுவேண்டுமானாலும் செய்யுங்கள் வருவதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார்.

இராமநாதனை 2 மணிக்கு பின்னர் வவுனியாவில் நிற்கக் கூடாது என உத்தரவிட்டது சுந்தரலிங்கத்திற்குச் சாதகமாக அமைந்தது. பன்சாலையிலிருந்து ஆயுதங்களுடன் புறப்பட்டவர்கள் மதவாச்சியில் முகமட்டின் கடையை உடைத்துக் கொள்ளையடித்துக்கொண்டுவந்தபோது போட்டுத்தள்ளப்பட்டாட்டார்கள்.

இந்தச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் ஹெலியில் எடுத்துச்செல்லப்பட்டு மதவாச்சி முற்றவெளி மைதானத்தில் எரிக்கப்பட்டன. சார்ஜன்ட் தம்பிராசா போனட்டின் மீது ஏறி நின்று சுட்டதாகச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எஸ்.உதித்
தரம் - 2B
யா/நல்லூர் செ.
பெனடிக் ஆர்.சி. வித்தி.



இ.திரிசன்
தரம் - 2B
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை



மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



சி.அபிந்திகா
தரம் - 4A
யா/ மானிப்பாய்
மகளிர் கல்லூரி



எஸ்.ஶ்ரீஷனா
தரம் - 7
யாழ்ப்பாணக்
கல்லூரி



அஸ்வின்,
தரம் 6
யாழ்.இந்துக்
கல்லூரி



ஆர்.ஆராதன்
தரம் - 6
யாழ்.இந்துக்
கல்லூரி



வி. டிஷானுஜா
தரம் 8A
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



S.அபிசயா
தரம் - 11A
யா/ இணுவில் மத்திய
கல்லூரி



வி.ஆருகா
தரம் - 2
யா/ அல்லாரை
அ.த.க.பாடசாலை



ந.கவிஸ்செயன்
தரம் - 1
யா/வடலியடைப்பு
சைவப்பிரகாச
வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org